# இறையியல் கோலங்கள்

வம் : 5 வண்ணம் : 1



புரட்டாசி 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

(பருவ இதழ்)

காலாண்டு வெளியீடு

| வடிவம்: 5 | புரட்டாசி 1988 | வண்ணம்: 1 |
| --- | --- | --- |

வெளியீடு:

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

ஞானப்பிரகாசர் கழகம்
தேசிய குருமடம்
அம்பிட்டியா — கண்டி.
இலங்கை.

(தனிப்பட்ட வினியோகத்திற்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழு:

ஆசிரியர் :

அருள்திரு. சீ. யோ. இம்மானுவேல்

துணை ஆசிரியர்கள் :

அருள்திரு. இம்மானுவேல் பெர்ணண்டோ
அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

விநியோகம் :

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

*Published by :*

St. Francis Xavier's Seminary
Columbuthurai—Jaffna.

Gnanapragasar Tamil Academy
National Seminary
Ampitiya—Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மறைநூலில் இறையரசு | 2 |
| 3. | இறையரசும் பொருளாதார அமைப்பும் | 8 |
| 4. | இறையரசும் பண்பாடும் | 14 |
| 5. | இரண்டாம் வத்திக்கான் சங்கமும் வளரும் ஆவியியலும் | 20 |
| 6. | அமைதியும் இறையரசும் | 43 |
| 7. | Biblical notion of the Kingdom of God | 49 |
| 8. | Kingdom—Just Economic Order | 49 |
| 9. | The Kingdom of God and Culture | 50 |
| 10. | Towards A Post–Vat. II... | 51 |
| 11. | Into the Stream of Peace | 52 |
| 12. | நன்கொடை வேண்டுகின்றோம்—We need your help | 53 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## மண்ணிலிருந்து விண்ணகம் நோக்கி......

அன்று இயேசுவின் போதனையிலும் சாதனையிலும் மையமாக விளங்கியது இறையரசு. இன்று அவருடைய திருச்சபையின் பணி அனைத்திலும் அதே இறையரசின் வளர்ச்சியும் வருகையும் மையமாகவும் கருப்பொருளாகவும் விளங்குவது தகுதியும் நீதியுமாகும்.

கடந்த சில நூற்றுண்டுகளில் இறையரசின் வளர்ச்சியும் திருச்சபையின் வளர்ச்சியும் ஒன்றேதான் என்றாற்போல், திருச்சபையை தொகையிலும் வகையிலும் கட்டியெழுப்புவதிலே கூடிய கவனமும் கரிசனையும் செலுத்தப்பட்டது. ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஏவுதலுக்கிணங்க, திருச்சபை இறை அரசின் ஊழியன் என்ற முறையில் தனது இயல்பையும் பணியையும் மீண்டும் கண்டுபிடித்துள்ளது.

மனுக்குலத்தின் மீட்பை இறையரசின் பாணியிலே வெளிப்படுத்திய யேசு, திருச்சபை தன்னையே மையமாகக் கொண்ட ஒரு சபையாகவோ **(self - centred community)** அன்றேல் சபை அங்கத்தவரின் மீட்பை மட்டும் நோக்கிற் கொண்டதாகவோ வாழவேண்டுமென்று பணிக்கவில்லை. மாறாக, மனித வாழ்வின் சகல அமைப்புக்களிலும் நற்செய்தி விழுமியங்களை **(Gospel values)** ஆழமாக வேரூன்ற செய்யவும்; அனைத்து மெய்மைகளிலும் இவை நிறைந்து செறிந்து வாழ்வின் உயிரூட்டமாக விளங்கப்பண்ணவும்; இதன் வழியாக இறையரசை ஆரம்பிக்கவும், அதன் முழுமையை நோக்கி சகலதும் உந்தப்படவும் திருச்சபை இயங்குகின்றது.

பெரும்பான்மை மறைகள், கலாச்சாரங்கள், இனங்கள் மத்தியில் திருச்சபை சிறுபான்மைக் குழுவாக இருப்பினும் இறை அரசின் வருங்கால முழுமைக்காக அனைத்தையும் உந்துவதும் ஊக்குவிப்பதும் அதன் தலைசிறந்த பணியாகும்.

மேற்கண்ட அடிப்படையில் இறையியல் சிந்தனைகளும் பணிகளும் புதிய திருப்பத்தை வேண்டுகின்றன.

**எஸ். ஜே. இம்மனுவல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைநூலில் இறையரசு

**(அருள்திரு அன்ரன் மத்தாயஸ்)**

**முன்னுரை :**

இன்று நாம் யேசுவை மையமாக வைத்து, மீட்பின் வரலாற்றைப் பழைய ஏற்பாட்டின் காலம், புதிய ஏற்பாட்டின் காலம் எனப் பிரித்தாலும், அன்று அந்த வேறுபாடு இருக்கவில்லை. இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட சிந்தனைகள், அடையாளங்கள், உருவகங்கள் அனைத்தையும் முன்னைய வெளிப்பாட்டின் பின்னணியிலேயே மக்கள் புரிந்து கொண்டனர். அதேபோன்று யேசு தமது பணியின் ஆரம்பத்திலேயே :

'' காலம் நிறைவேறிவிட்டது,
கடவுளரசு நெருங்கிவிட்டது.
ஆகவே மனம் திரும்பி
நற்செய்தியை நம்புங்கள்.'' (மார்கு 1 : 14 — 15)

என்று உரைத்தபோது மக்கள் எதைப் புரிந்து கொண்டார்கள் என்பதை மறைநூலில் பார்ப்போம்.

## 1. பழைய ஏற்பாட்டில் :

இஸ்ராயேல் மக்கள், தம்மை அழைத்து, தேர்ந்தெடுத்து, உடன்படிக்கை செய்து, பாதுகாத்து, வழிநடத்திய கடவுளின் மகத்தான செயல்களை, எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்த நிகழ்ச்சியிலிருந்தே சிறப்பாகக் கண்டுணர்ந்தனர். பல இறைக் கொள்கையுடைய நாட்டிலிருந்து ஆபிரகாமை அழைத்து அவரையும் அவர் சந்ததியையும் ஒரு புதிய மறை—சமூக வாழ்வுக்கு ஆயத்தம் செய்தார். கடவுளை ஒரு சக்தியாக மட்டும் காணாது, உறவுகொள்ளும் ஒரு ஆளாக அவர்கள் படிப்படியாகக் கண்டுணர வாய்ப்புக் கிட்டியது.

கடவுளும் அவர்களுக்குத் தம்மைப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தினார். எனினும் இந்த வெளிப்பாடு ஒரே கட்டத்தில் முழுமையானதாக அமையவுமில்லை. இறைவனே தமக்கு விடுதலைதரும் பேரரசன் என்பதை இஸ்ராயேல் மக்கள் தமது அனுபவத்தினூடாகக் கண்டனர். '' அந்நியர்களாய் அலைந்து திரிந்த அவர்களுக்கு கானான் நாட்டை அளிப்பதாக அவர்களோடு அவர் உடன்படிக்கை செய்தார் ......'' '' ஆண்டவராகிய நாமே எகிப்தியருடைய சிறையினின்று உங்களை விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாக்கி அடிமைத் தனத்தினின்றும் மீட்டு ஓங்கிய கையாலும் பெரும் தண்டனைகளாலும் உங்களை நாம் ஈடேற்றுவோம். மேலும் உங்களை நம் சொந்த மக்களாகத் தெரிந்து கொள்வோம். அத்தோடு உங்கள் கடவுளாயுமிருப்போம். பிறகு நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாம் என்று அறிவீர்கள்." (யாத். 6 : 4 — 7)

அ) வரலாற்றில் விடுதலை :

இறைவன் தரும் விடுதலை தாவீது மரபில் பிறக்கும் ஒரு மெசியா வழியாக நிறைவெய்தும். அந்த விடுதலை எம் உலகிலே இந்த வரலாற்றிலே முழுமைபெறும் என நம்பினர். மக்கள் நிறைவும், மகிழ்ச்சியும் எய்துவர் ; படைப்பனைத்தும் ஒன்றுபட்டு வாழும் நிலை உருவாகி சமாதானம் நிலவும் என எதிர்பார்த்தனர். "அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். நாட்டுக்கு எதிராய் நாடு வாள் எடுக்காது."

(இசை. 2 : 4)

ஆ) வரலாற்றின் முடிவில் விடுதலை :

இஸ்ராயேல் அடிமைகளாயிருந்த பபிலோனியா பேர்சியா நாட்டு மறைச் சிந்தனைகளின் அடிப்படையில் தீமை நிறைந்த இந்தயுகம் இறைவனின் வல்லமைமிக்க செயலாற்றலால் அழிக்கப்பட்டு, "புதிய வானமும் புதிய பூமியும்" (இசை. 65 : 25; திருவெளி. 21 : 1) உருவாகும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது.

எமது உலகையும் வரலாற்றையும் கடந்து புதியதொரு வரலாற்றிலே இறைவனின் வாக்குறுதியும் விடுதலை கொடுக்கும் செயலாற்றலும் நிறைவுபெறும் என நம்பினர்.

## 2. இறைவனின் ஆட்சியும் இறையரசும் :

ஓர் அரசனின் முழுமையான பணி மக்களை விடுதலை செய்வதே ; அப்பணி வறுமையிலிருந்து, அடக்குமுறையிலிருந்து, மடமையிலிருந்து, நோயிலிருந்து, மாற்றானிடமிருந்து, அநீதர்களிடமிருந்து, கள்வர்களிடமிருந்து விடுதலையாக்குவதாகும். இதே பாணியில் இறைவனின் ஆற்றல் மிக்க செயல்களால் விடுதலை பெற்ற மக்கள் அவரைத் தமது பேரரசனாகக் கருதினார்கள்.

ஆனால் இஸ்ராயேல் மக்கள் கடவுளை ஒருபோதும் பெயர்சொல்லி அழைப்பதில்லை. ஏனெனில் தமக்கு அருகதை இல்லையென உணர்ந்தனர். ஆகவே இறைவன் விடுவிக்கிறார், அல்லது இறைவன் ஆட்சி செய்கிறார் என்று ஒரு பயநிலையுடன் இறை நாமத்தைப் பயன்படுத்துவதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பதிலாக, ''இறைவனின் ஆட்சி'' அல்லது "இறைவனின் அரசு'' என்று குறிப்பிட்டனர். ஆகவே, இறைவனின் ஆட்சி, அல்லது இறைவனின் அரசு என்று கூறும்போது இறைவன் வல்லமையுடன் செயலாற்றுவதையே குறிக்கின்றது. இது ஒரு குறிப்பிட்ட இடமன்று. இறைவன் தன் ஆற்றலால் உருவாக்கும் ஒரு புதிய அமைப்பு, புதிய படைப்பு, 'கடவுளின் புரட்சி' எம்மை அடிமைகளாக்கும்—எல்லாத் தளைகளிலிருந்தும் எம்மை விடுவித்து. எம் இதயம் நாடும் அனைத்து நன்மைகளையும் நிறைவாகப் பொழிந்து எம்மை வாழவைக்கும் நிலையையே இறையரசு என்கிறோம். ஆகவே அது ஒரு ''சிந்தனைக் கோட்பாடு'' என்று கூறுவதை விட ஓர் அடையாளம் (Symbol) என்று கூறுவதே பொருத்தமாகும்.

## 3. புதிய ஏற்பாட்டில்:

'' இறையரசு நெருங்கிவிட்டது ...... எனவே மனந்திரும்புங்கள் '' (மாற். 1 : 15) என்று வரலாற்று இயேசு கூறி, அந்தச் செய்திக்குத் தமது வாழ்விஞல் உயிர் கொடுத்தார். அவரது போதகமும் வாழ்வும் மக்களை மிகவும் கவர்ந்ததால் அவரைப் பல இடங்களிலும் தேடிச் சென்றூர்கள். (மத். 4 : 23—25 ; மாற் 3 : 7-10)

ஆரம்பத்தில் அருளப்பரிடம் திருமுழுக்குப் பெற்று அவரின் சீடனுக இயேசு வாழ்ந்தார், எனினும் தமது பணி வெறும் போதனைப் பணி அன்று என்பதைப் பின் உணர்ந்த இயேசு, தாம் வளர்ந்த ஊரின் செபக்கூடத்தில் தனது வாழ்வின் பணி எது என்பதை எடுத்தியம்பினூர். ''ஆண்டவருடைய ஆவி என் மேலே ...., எளியோருக்கு நற்செய்தி சொல்லவும், ...... அவர் என்னை அனுப்பினூர் '' (லூக். 4 : 18 — 19) ஏனைய அக்காலத்துப் போதகர்களைப்போல அவரும் போதித்தார், பல இடங்களுக்கும் சென்றூர், சீடர்களைச் சேர்த்துக்கொண்டார். எனினும் அவர்களைப்போலன்றி அதிகாரத்துடன் போதித்ததை மக்கள் இனம்காணூது விடவில்லை (மாற். 2 : 12 ; லூக். 4 : 32). அவர் புதுமைகள் செய்தார். பெண்களும் குழந்தைகளும், ஆயக்காரரும் பாவிகளும் அவரைப் பின்சென்றதை மதத்தலைவர்கள் தீய கண்கொண்டு பார்த்தனர். எனினும் அவர் இறைவனின் அன்பை எடுபிக்கும் தமது பணியிலிருந்து விலகவில்லை.

அன்று வாழ்ந்த யூதர்கள் பலரும் பலவிதமான செயற்பாடுகளினூடாகத் தமக்கு விடுதலை கிடைக்குமென நம்பியிருந்தனர். பரிசேயர்—சதுசேயர் — சட்டவல்லுனர்கள், சட்டத்தை நுணுக்கமாக அனுசரிப்பதில் மீட்பை எதிர்பார்த்தனர். தீவிரவாதிகள் ஆயுதத்தின் மூலம் அதை அடைய முற்பட்டனர். தாவீதின் மரபில் தோன்றும் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெசியா விடுதலை கொணர்வார் என்று பொதுவாக யூதர்கள் நம்பினர். எனினும் இயேசு இவற்றை ஏற்கவில்லை (காண். மத். 4 : 1–11). இவை அனைத்திற்கும் மேலாக அன்பே மனிதனுக்கு முழு விடுதலையைத் தருமென்று அவர் போதித்தும் வாழ்ந்தும் காட்டினார்.

இயேசு தனது சொந்த அனுபவத்தினூடாக, ஒரு காலத்தில் வல்லமையுள்ளவர், விடுதலை செய்வார் என்று தம்மைத்தாமே வெளிப்படுத்திய கடவுள், எம் அன்புத் தந்தையாக இருக்கிறாரென்று எண்பித்தார். கடவுளின் பெயரையே கூறப்பயந்த யூதருக்கு, இறைவனை "அப்பா, தந்தாய்" என்று அழைக்க உரிமை கொடுத்தார். "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார் ; இதனால் கடவுள் நம்மீது கொண்ட அன்பை எண்பிக்கிறார்" (உரோ. 5 : 8) என்று புனித சின்னப்பர் கூறுமளவுக்கு இறைவனின் நிபந்தனையற்ற அன்பை ஏற்றுவாழ யேசு அழைப்பு விடுக்கிறார். இந்த அன்பே எமக்கு விடுதலை தருகிறது. இந்த அன்பு — விடுதலை தம்வழியாக உலகில் வந்துள்ளது என்பதை உணர்ந்தவராகவே அவர் வாழ்ந்தார், போதித்தார், செயற்பட்டார்.

இறைவனின் இந்த நிபந்தனையற்ற அன்பு ஒரு கொடையாக, யேசுவின் வழியாக எமக்குத் தரப்பட்டாலும் அது எமது வாழ்வை ஆழமாக ஊடுருவி, எமது பதிலை எதிர் நோக்குகிறது. இதையே யேசு "மனந்திரும்புங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். சில பாவங்களில் இருந்து விடுபடுவது மட்டுமல்ல, மாறாக, எமது நாட்டங்கள், சிந்தனைகள், மதிப்பீடுகள், மனப்பாங்கு எல்லாமே முற்றாக மாறி, வாழ்விலே ஒரு புதிய திருப்பத்தைக் கேட்டு நிற்கிறது இதற்கு இயேசு — சக்கேயு சந்திப்பும், அவனது மனமாற்றமும் ஓர் எடுத்துக்காட்டு (லூக். 19: 1–10). எனவே "இறையரசு" ஒரு கொடையாக (Gift) இருப்பினும், அது எமது வாழ்விற்கு ஓர் அறைகூவலாகவும் (Challenge) இருக்கிறது. இந்த இறையரசு யேசுவின் போதனையிலும், புதுமையிலும், வாழ்க்கை முறையிலும் வெளிப்படுகின்றது.

அ) போதனையில் :

மலைப்பொழிவிலே அன்றைய யூத சமுதாயத்தின் விழுமியங்களுக்கு மாறாக, "ஏழைகள் பேறுபெற்றவர்கள்" போன்ற புதிய தத்துவங்கள் வெளிப்பட்டன. சட்டமே எல்லாம், பழிக்குப்பழி போன்றவை நிராகரிக்கப்படுகின்றன. இறை சாயலாகப் படைக்கப்பட்டு, அவரால் அன்பு செய்யப்படுகின்ற மனிதரின் முதன்மை அங்கீகரிக்கப்படுகின்றது. இறையரசு ஏற்கனவே இயேசுவின்மூலம் உலகிலே பிரசன்னமாயிருந்தாலும், அது வளர்ந்து வரலாற்றிலே முழுமை பெறவேண்டும் (மாற்கு 4 : 30—32).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) புதுமைகளில் :

பல்வேறு புதுமைகள் மூலமாக இயேசு தமது போதனையை உறுதிப்படுத்தினார். நோய்களிலிருந்து பலரை விடுவித்தார்; தீய சக்தியின் (பேய்களின்) ஆதிக்கத்திலிருந்து வேறு பலருக்கு விடுதலை கொடுத்தார். "நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விரலால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது" (லூக். 11 : 20).

இயேசுவின் புதிய பணியைப்பற்றி விசாரிக்கவந்த அருளப்பரின் சீடருக்கு, "குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர்......எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது" (லூக். 7 : 22) என்று விடை பகர்ந்ததிலிருந்து தமது புதுமைகளினால் (மக்களுக்கு விடுதலை கொடுப்பதினால்) இறையரசு வெளிப்படுவதை அவர் திட்டவட்டமாக உணர்ந்திருந்தார் என்பது வெள்ளிடைமலை.

இ) வாழ்க்கை முறையில் :

போதிப்பதுடன் இயேசு நின்றுவிடாது, அன்பு – விடுதலைவாழ்வு எல்லோருக்கும், சிறப்பாக சமுதாயத்தினால் ஒடுக்கப்பட்டோர், பாவிகளெனக் கருதப்பட்டோர், பெண்கள், குழந்தைகளுக்கும் உண்டு என்பதைத் தமது வாழ்வால் காட்டினார். அவர்களைக் குணமாக்கினார், அவர்களோடு உண்டு குடித்தார், அவர்களை ஆசிர்வதித்தார், அவர்களின் பணியை உவப்புடன் ஏற்றார். அவருடைய போதனையை விட இவ்விதமான உறவுமுறைகளே அவருக்கு இன்னும் அதிகமாக எதிரிகளைச் சம்பாதித்தது. எனினும் இப்படிப்பட்டவர்கள் இறைவனின் அணை கடந்த அன்பைச் சுவைக்க அவர் வழிசமைத்தார்.

"தனது நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இருக்க முடியாது" என்று கூறிய இயேசு, தமது விடுதலை செய்யும் பணியை மரணத்துக்கு அஞ்சி நிறுத்தவில்லை. மாறாக தமது மரணத்தின் வழியாக "அப்பா"வின் அணைகடந்த அன்பிற்குச் சாட்சியானார். அதனால் "கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்" (அப். பணி 3 : 15).

## 4. இறையரசின் விழுமியங்கள் :

இயேசுவின் வருகையினால் உலகிலே உதயமான அன்பு — விடுதலை வாழ்வு (இறையரசு) மனிதனிலும் அவன் வாழும் உலகிலும் புதிய விழுமியங்களைப் பரப்பி அவனது வாழ்விலே மகிழ்ச்சியையும் நிறைவையும் கொணரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) சுதந்திரம் :

அன்றைய சமுதாயத்தின் பிழையான எதிர்பார்ப்புகளின்படி இயேசு வாழ முற்படவில்லை. இயேசு அன்பை எண்பிப்பதற்காகப் பெயரையோ, புகழையோ, வசதியையோ, பணத்தையோ விரும்பாது சுதந்திரமாக வாழ்ந்தார். அமைப்பு முறைகளின் அதிகாரத்துக்கு அவர் அஞ்சவில்லை (லூக். 13 : 31—33). மக்களின் சட்டங்களை மீறி தொழுநோயாளரைத் தொட்டும், பாவிகளென்று கணிக்கப்பட்டோரோடு உண்டு குடித்தும், நன்மை செய்வதற்காக ஓய்வு நாட்களை மீறியும் வாழ்ந்தார். மனிதனை அடிமையாக்கும் சடங்குமுறைகளி லிருந்தும் சுமையாயிருந்த சட்டங்களிலிருந்தும் மக்களை விடுவித்தார்.

ஆ) அன்புறவு :

இவ்விதமான சுதந்திரம் அனைவரையும் ஆழமாக அன்பு செய்யவும், உறவுகளை வளர்க்கவும் துணை செய்கிறது. நாமும் பிறரை அன்பு செய்யவேண்டும் என்பதற்காகவே இறைதந்தையின் அன்பு நம் உள்ளங்களிலே பொழியப்பட்டுள்ளது (உரோ. 5; 5). எமது உறவுகளின் நிறைவும், நண்பர்களை மட்டுமல்ல, எதிரிகளையும் அன்பு செய்யும் நிலையுமே நாம் இறை அன்பை ஏற்றுக்கொள்கின்றோம் என்பதற்கு அடையாளங்களாக அமைகின்றன.

இ) நீதி :

எங்கு அன்புறவு உண்டோ அங்கே நீதி செழித்தோங்கும். அநீதியான சமூக — பொருளாதார — அரசியல் — மறை அமைப்புக்களை இயேசு என்றும் கடிந்துகொண்டார். ஏழைகள், பாவிகள், சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டோர் மட்டில் தமது அன்பையும், கரிசனையையும், சிறப்பான முறையிலே காட்டி அன்பின் அடிப்படையில் எவ்விதம் நீதியை நிலைநாட்ட வேண்டும் எனக் கற்பித்தார்.

முடிவுரை :

இந்த இறையரசின் விழுமியங்களை நாம் தனியாகவும், சமுதாயமாகவும், அமைப்புக்களாகவும் வாழ முற்படும்போது இறைவனின் நிபந்தனையற்ற அன்புக்கு நாம் சான்று பகர்கிறோம். இவ்விதமே இறைவனின் அன்பு — அரச செயலாற்றல் — இறையரசு எம்மத்தியிலே வந்து விட்டது என்பதற்கு நாமே அடையாளங்களாக இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையரசும் பொருளாதார அமைப்பும்

(அருள்திரு ம. இ. பயஸ்)

இல்லாமையின் காரணமாக சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள், பிரிவுகள் பிணக்குகள் தோன்றுவதால், ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் ''ஒருவனும் தன் உடைமை எதன்மீதும் உரிமை பாராட்டவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது... வறுமைப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவனுமில்லை. ஏனெனில், நிலபுலம், வீடு உடையவர்கள் அவற்றை விற்று அத்தொகையைக் கொண்டு வந்து, அப்போஸ்தலரின் பாதத்தில் வைப்பார்கள். அவர்கள் அதை அவனவன் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுப்பார்கள்'' (அப். பணி. 4:32–35). தேவை ஏற்படும் பொழுது ''சீடர்கள் ஒவ்வொருவரும் தங்களாலான பொருளுதவியை யூதேயாவிலுள்ள சகோதரர்களுக்கு அனுப்பத் தீர்மானித்தனர்'' (அப். பணி. 11:28–30).

இயேசுவின் வழித்தோன்றல்கள் இவ்வாறு செயற்படுவதற்குக் காரணம் இருந்தது. வறுமை, இல்லாமை, அநீதி, ஏற்றத்தாழ்வு, பசி பிணி, அடிமைத்தனம் அனைத்தும் அகற்றப்பட்டு பகிர்தல், நிறைவு, நீதி, சமத்துவம், உணவு, சுகவாழ்வு, சுதந்திரம் போன்ற உயர்நிலையை அனைவரும் தமதாக்கிக் கொள்ளல் வேண்டுமென்பதே இறையரசின் குறிக்கோளாக அமைந்திருந்தது.

1. இறையரசைப் பறைசாற்றிய இயேசுவின் பிறப்பு, வாழ்வு, போதனை, மரணம் அனைத்தும் ஏழைகளின் வாழ்க்கை நிலைகளை பிரதிபலிக்கின்றன. ''கடவுள் தன்மையில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார்'' (பிலிப். 2:6–8).

இயேசுவின் பொன்மொழிகளுக்குச் செவிமடுத்துக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் இறையரசின் இறுதிக்கட்டம் ஆரம்பமாகியது. ஏழைகள் சார்பாக இறைவன் செயலாற்றலானார். நாசரேத்தில் உள்ள செபக் கூடத்தில் இயேசு இறையரசின் விஞ்ஞாபனத்தை அறிமுகப் படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஆண்டவர் தமது ஆவியி னாலே
அன்பால் எனக்கு அபிஷேகம் செய்தார்!
நலிந்தோர் எல்லாம் நற்செய்தி பெறுவர்
விலங்கிடப் பட்டோர் விடுதலை அடைவர்
விழிகளை இழந்தோர் விழிகளைப் பெறுவர்
என்பதை எல்லாம் எடுத்துச் சொலவும்
ஒடுக்கப் பட்டோர்க் குரிமை வழங்கவும்
ஆண்டவர் தமது அருளைச் சொலவும்
அவரே என்னை அனுப்பிவைத் தாரே!''
இசையாஸ் என்னும் இறைவாக் கினரே
இயம்பிய இதனை இயேசு படித்தார்
'' நிறைந்ததோர் வாக்கு நிறைவே றிற்று
என்றார்...'' (இயேசு காவியம் இல 48; லூக். 4:16—21).

2. இயேசுவின் பணியின் தாக்கமும், இறையரசின் அமைப்பு முறையின் சமூக முன்னேற்ற சார்பும், திருமுழுக்கு அருளப்பரின் சீடருக்குக் கொடுக்கப்பட்ட விடையில் மேலும் உறுதிபெறுகின்றன.

'' கண்ணில் லார்க்குக் கண்வரு கின்றது
செவிடர் தமக்குச் செவிவரு கின்றது
தொழுநோய்க் காரர் சுகம்பெறு கின்றனர்
மரணம் அடைந்தோர் மறுபடி வந்தனர்
எளியோர்க் கெல்லாம் இனியநற் செய்தி
தரப்படு கின்றது சாற்றுவீர் இதனை!''
(இயேசு காவியம் இல. 39; லூக். 7:18—23).

இயேசு தமது செயற்பாடுகள் மூலமாக தம்மை இனங்கண்டு கொள்ளும்படி இயம்புகின்றார். அவர் இறையரசை அறிவித்து சேவை புரிந்த மக்களின் பட்டியலைத் தயாரித்தால் அங்கு ஏழைகள், சிறைப்பட்டோர், அடிமைகள், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், ஊனர்கள், முடவர்கள், நோயாளிகள், காயப்பட்டோர், விதவைகள், அனாதைகள், அல்லல் படுவோர், சமூகவிளிம்பில் தள்ளப்பட்டோர் வெற்றிப் பவனி வருவார்கள்.

3. மங்காத மலைப்பொழிவின் வழியாக இறையரசின் அமைப்பு அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள்
ஏனெனில், கடவுளின் அரசு உங்களதே.
இப்பொழுது பசியாய் இருப்பவர்களே நீங்கள் பேறுபெற்றவர்கள்
ஏனெனில், நிறைவு பெறுவீர்கள்.
இப்பொழுது அழுபவர்களே நீங்கள் பேறுபெற்றவர்கள்
ஏனெனில், சிரிப்பீர்கள்" (லூக். 6:20–21).

ஏழைகள் பேறுபெற்றவர்கள் ஏனென்றால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் இறை அரசின் வாரிசுகள் ஆகின்றனர். இறையரசு நிறைவேறுவதால் அடிமைத்தனமும் அநீதியும் அகற்றப்படுகின்றன. (மத். 10:28–30) ஏழ்மையின் காரணங்கள் அற்றுப்போக எளிமை அழிகின்றது. புனித மத்தேயு எழுதிய பரிசுத்த நற்செய்தி, அனைத்தையும் தாமாகத் துறந்த (மன) தரித்திரரைப் போற்றுகின்றது (மத். 5:1–10). புனிதர்களின் பேரணியில், இறையரசில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டுமென்பதை மீண்டும் தெளிவாக இயேசு எடுத்துரைத்தார்.

"வாரும் எந்தன் தந்தையின் மைந்தரே!
உலகில் அன்றே உமக்கெனத் தோன்றிய
உங்கள் ஆட்சி உங்களுக் காருக!
காரணம் நானிவண் சொல்வது கதையல!
பசித்த போது புசியெனச் சொன்னீர்
தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுத்தீர்
வாழ்வில் என்னை வருகவென் றழைத்தீர்
ஆடை யற்றேன்; ஆடை கொடுத்தீர்
நோயுற் றேனை நோக்கிட வந்தீர்
சிறையில் என்னைக் காண விரைந்தீர்!
என்று கூறும் மன்னனை நீதியோர்,
'என்று எங்குமக் கென்னசெய் தோமெ'ன
கேட்பர் அதற்கு மனுமகன் கிளத்துவார்;
'எனக்கு அல்ல ஏழைஎன் சோதரன்
தனக்கு நீர்இத் தகைமைகள் செய்தனீர்
எனக்கு செய்த தென்றுநான் எண்ணினேன்!"
(இயேசு காவியம் இல. 115; மத். 25;31–46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் ஆசீர் பெற்ற மக்களுக்கு ஆயத்தப்படுத்தப்பட்ட அரசு உரிமையாகின்றது. ஏனென்ருல், அவர்கள் இல்லாமையைப் போக்கினுர்கள், புறக்கணிக்கப்பட்டவர்களை ஏற்றுக்கொண்டார்கள், துன்பப்பட்டவர்களைத் தேற்றினுர்கள். மக்கள் சேவை மகேசன் சேவையாகக் கணிக்கப்பட்டது. இறையரசை நாம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் சுவைக்க, அன்புள்ளத்தோடு அயலானின் துன்பதுயரத்தைக் களையும் நற்செயல்கள் புரியவேண்டும். எங்கள் மத்தியில் பிறர் அன்புச்செயல்கள் தாராளமாகத் தோன்றிடும் பொழுது, இறையரசு ஆரம்பமாகியுள்ளது -இல்லை- தோன்றியேவிட்டது எனக் கூறிவிடலாம். எமது வாழ்வில் இறைவனை ஏற்றுக் கொண்டுவிட்டால் மட்டும் போதாது (பேய்கள் கூட கடவுள் ஒருவரே என்று விசுவசிக்கின்றன: யாக. 2:19—20). அவரது அரசைக் கட்டியெழுப்ப உண்மையிலும், நீதியிலும், அன்பிலும் செயலாற்றவேண்டும். செயலற்ற விசுவாசம் பயனற்றது (யாக. 2:14—17). வறுமையுற்ற மக்களோடு உங்களுக்குள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள் (உரோ. 12:13). முகமலர்ச்சியுடன் கொடுப்பவன்மேல் தான் கடவுள் அன்புகூர்கிருர் (2கொரி. 9:7). இறைவன் தம்மை வெளிப்படுத்தும் திருவருட் சாதனமாக ஏழைகள் கருதப்படுகின்றனர். ஏழைகளுடன் இயேசு தம்மை ஒன்றித்திருக்கிருர். இறைவனைத் தாங்கும் நடமாடும் ஆலயங்களாகிய ஏழைகள், இறையரசின் முதல் உரிமையாளர்களாகின்றனர் (யாக. 2:5—6). அவர்களே இனங்களையும் திருச்சபையையும் இறையரசிற்கு அழைத்துச் செல்பவர்கள். இறைவனுக்கு அன்புசெய்வதும் எளியோருக்கு முழுமையாக அர்ப்பணிப்பதும் இணைவதால் ஒன்றிற்கொன்று துணைபுரிந்து நிறைவுபெறுகின்றன. ''இறைவனைத் தேடும் தாகம், ஏழையைத் தேடும் தாகத்தில் நிறைவுபெறுகிறது'' என லெயோனுட் பொவ் கூறுகின்ருர்.

4. இறையருளால் உரிமைகளைப் பெற்று, வலிமையோடு குரல் எழுப்பும் ஏழைப்பாட்டாளிகளின் கீதமாக, இறையரசின் எழுச்சிக்கீதமாக மரியாவின் பாடல் அமைகிறது.

''அவர் தமது கைவன்மையைக் காட்டினுர்,
நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினுர்,
தாழ்ந்தோரை உயர்த்தினுர்.
பசித்தோரை நலன்களால் நிரப்பினுர்
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினுர்'' (லூக். 1:51—53).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தில் நாம் சந்திக்கும் கணவனை இழந்த கற்புடைய விதவை கண்ணகியின் நிலை, அநீதி செய்த அரசனையும் அவனது மனைவியையும் அரியணையினின்று அகற்றியதுபோல, மதுரைநாட்டையும் தீயோரையும் தீ பற்றியெரியச் செய்ததுபோல, இறையரசின் நீதியை, விடுதலையை, ஏழைகளின் சார்பாக இறைவன் செயலாற்றுவதை மரியாளின் பாடல் அழகாக எடுத்துரைக்கிறது. பொருளாதார, சமய, சமூக ஆட்சிப் பீடங்களின் அமைப்புகளால் அடிமையாக்கப்பட்டு உரிமைகளை இழந்தவர்கள் எழுப்பும் ''இரத்தக் குரல் பூமியின்று இறைவனை நோக்கிக் கூக் குரலிடுகிறது '' (ஆதி. 4:10). செருக்குற்றவர், வலியோர், செல்வந்தர் ஆட்சியின்று அகற்றப்பட, தாழ்மையானோர், பசித்தோர் (இல்லார்), பகிர்ந்து வாழ்வோர் இணைந்து சகோதரத்துவத்தில் சமத்துவப் பணிபுரிவர் (மத். 20:25—28).

**முடிவுரை:** ஏழைகளின் சார்பாக இறைவன் செயல்படுவதை வேதாகமம் தெளிவுறக் கூறுகின்றது. அடிமைப்படுத்தப்படுவோருக்கு உரிமை வாழ்வு வழங்கும் இறைவனை யாத்திரை ஆகமம் காண்பிக்கின்றது. அன்றாட வாழ்க்கையில் அக்கறையுடைய இயேசுவின் ''இவ்வுலக'' கரிசனை மழுங்கடிக்கப்படுதல் முறையல்ல. இயேசு நிறுவிய இறையரசு, அவர் பறைசாற்றிய விடுதலை, அவர் ஏழைகளோடும் ஒடுக்கப்பட்டவர்களோடும் தம்மை இனங்கண்டுள்ளது அனைத்தையும் ஆன்மீகக் கண்ணோட்டத்தில் மட்டுப்படுத்தல் மாபெரும் தவறாகும். முழுமையாகப் படைக்கப்பட்ட மனிதனை, ஆன்மா சரீரம் என இரு கூறுகளாகப் பிரித்து, ஆன்மீக தேவைகளைப் பூர்த்திசெய்வதே சமயத்தின் சரியான கடமையென்பது மடமையாகும் (மத். 7:21—23). ஆன்மீக ஆவலும் துயர்போக்கும் பணியும், விசுவாசமும் பிறர் அன்புச் செயல்களும், இவ்வுலகிலும் மறுவுலகிலும் அர்த்தமுள்ள இறையரசை நிறுவப்பாடுபடுவதும் இணைந்து செயல்படவேண்டும். வேதாகமத்தில், ஆலயத்தில், வழிபாட்டில் மட்டுமே இறைவனைச் சந்திக்கமுடியும், இறையரசிற்காக செயலாற்ற முடியும் என்ற சிந்தனையை மாற்றி, பிறர் அன்புப் பணிகளிலும், ஏழைகளிலும், துன்புறுபவரிலும், அதே இறைவனைச் சந்தித்து செயலாற்ற வேண்டிய தன் அவசியத்தை உணரவேண்டும் (லூக். 10.25—37). இறைவனையும் செல்வத்தையும் இணைக்கமுடியாதாயினும் (மத். 6:24) இயேசுவையும் ஏழைகளையும் பிரிக்கமுடியாது. இல்லாமையால் வாடுவோரைப் புறக்கணித்தல் செயலாக்கம் பெற்ற இறைமறுப்புக் கொள்கையாகவும், இயேசுவின்பால் விசுவாசமற்ற செயலுமாகக் கணிக்கப் படுகிறது. வாழ்கைக்கு வேண்டியவை பல உண்டு என அறிந்திருக்கும் இறைவன் அவற்றை எமக்குத் தாராளமாக அளிப்பதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மத். 6:8; 6:32; 7.11) பிச்சை கொடுங்கள் (மத். 6:3–4; மத். 19:21; லூக். 12:33) ''கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்ருய் உங்கள் மடியில் போடுவார்கள்'' (லூக். 6:38) என்று கூறுகின்ருர். இறையரசின் போதனைக்குச் செவி மடுக்க வந்த மக்களின் பிணிகளைப் போக்கி (மத். 14:14)'' நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் (மாற். 6:37) என்று கூறி அப்பங்களை பலுகச்செய்து பாமரருக்குப் பரிமாறச் செய்தார். உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றை யெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத். 7:12) என்று கூறி, ''உன்மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக'' (மத். 22:39) என்று பகர்ந்து அயலவனில் எம்மையே கண்டு செயலாற்ற அழைக்கின்ருர். பசி, பிணி, பகைமையற்ற பொரு ளாதார அமைப்பை இயேசுவின் இறையரசு பறைசாற்றி நின்றது.

இவ்வுலகில் இறையரசை நிறுவுவதற்கான செய்தியை இயேசு போதித்தார். அவருடைய நற்செய்தி அறிவிப்பு சமய சார்புடையதா கக் கருதப்பட்டாலும், சமூக பொருளாதார அரசியல் அமைப்புகள் அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி, சகல வாழ்க்கை முறைகளிலும் அடிப்படை மாற்றத்தை உருவாக்கியது. அக்காலத்தின் அமைப்புகளின் அதிகாரத்தில் இருந்து அடக்கி ஆட்சிபுரிந்தவர்களுக்கு, அவருடைய அறைகூவல் அச்சத்தை விளைவித்தது. புதிய வானம் புதிய பூமி இறை யரசின் வழியாக படைக்கப்படுவதை விரும்பாதவர்கள் இயேசுவைக் கொன்றனர். இறையரசின் மதிப்பீடுகளின்படி வாழ்வோரின் அமைப்பு ஏழைகளின் சார்பான வாழ்க்கை வடிவம்பெற தொடர்ந்து தியாகிகள் பலர் உருவாகவேண்டும்.

''மனிதன் சுய விருப்போடும் முழுமையாகத் தன்னை இறை வனின் ஆதிக்கத்தின் கீழ் கையளிக்கும் போது இறையரசு உருவாக்கப்படுகின்றது,''

**Oscar Culmann**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையரசும் பண்பாடும்

(அருள்திரு ஜே. நீக்கிலஸ்)

## 1. நிலையற்ற அரசு:

அரசு என்பது நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொல். ஒரு நாட்டின் ஆட்சியமைப்பையே நாம் அரசு எனக் குறிப்பிடுகின்றோம். மக்களின் நலன்களைக் கட்டிக்காப்பதே அரசின் முதற்கடமையாகும். பொருளாதார, சமூக, கல்வி ரீதியில் மட்டுமல்லாமல் அதற்கப்பாலே சுதந்திரம், சமயம், மனித மாண்பு, மொழி, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றை பேணிக்காப்பதும் ஓர் அரசின் முக்கிய பணியாக இருத்தல் வேண்டும். வரலாற்றிலே ஆட்சி அமைப்புக்கள் நீடித்து நிலைப்பதில்லை. அவை தளர்ச்சியுற்று வீழ்ச்சியடைவதையும், மாற்றப் படுவதையும் நாம் காண்கின்றோம். பல அரசியல் அமைப்புக்கள் குறுகிய நோக்குடையனவாகவும், தன்னலப் போக்குடையனவாகவும் அமைந்திருக்கின்றன. இதனால் பலர் அரசியலிலே வெறுப்படையவும் செய்கின்றனர். இன்று வல்லரசுகளுக்கிடையே எழும் போட்டிகள் உலகத்தையே அழிக்குமளவிற்கு அச்சுறுத்தி நிற்கின்றன. அரசியல் காரணங்களுக்காக வரலாற்றிலே எழுந்த போர்களும் அழிவுகளும் அளவிட முடியாதவை. அடிப்படையாக அரசும், அரசியல் அமைப்பும் இவ்வுலகிலே நிரந்தரமற்றவை என்பதையே வரலாறு எமக்கு உறுதியாகக் கூறிநிற்கின்றது.

## 2. இறையரசு ஒரு மறைபொருள் :

இயேசுவும் உலக வரலாற்றிலே ஓர் அரசை அறிவித்தார். ஆனால் அவர் அறிவித்த அரசைப் பலர் புரிந்துகொள்ளவில்லை. சிலர் அதை ஏற்கவுமில்லை. இயேசுவின் போதனைக்கும் பணிக்கும் மையமாக அமைந்திருந்தது இறையரசு. இந்த இறையரசே அவரது வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதாயும் இருந்தது. உலக அரசையோ அல்லது ஓர் அரசியல் அமைப்பையோ நாம் இயேசுவின் இறையரசுக்கு ஒப்பிட முடியாது. இறைவனின் அரசு அல்லது ஆட்சி, தளர்ச்சியுற்று நிலைகுலைந்து போகும் இவ்வுலக அரசுக்கு நிகரற்றது. எந்த ஆட்சியும் அரசும் இறையரசை மேற்கொள்ளவோ அன்றேல் வெற்றிகொள்ளவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. இறையரசை நாம் முற்ருக உய்த்துணரவோ, அறிவுக்குள் அடக்கிவிடவோ முடியாது. அது ஒரு மறைபொருள். இறை வெளிப் பாடும், விசுவாசமுமே அதனை அறிந்து ஏற்றுக்கொள்ள அவசிய மானவை.

## 3. இயேசுவும் பண்பாடும் :

இறையரசு ஒரு மறைபொருளென்ருல் அதனைப் புரிந்துகொள்ள அடையாளங்கள் தேவை. இயேசு இறையரசை மக்கள் விளங்கும் அடையாளங்கள் வழியாகப் போதித்தார். புனித மத்தேயு நற்செய்தி யில் காணப்படும் (அதி. 13) விதைப்பவன், நல்ல விதையும் களையும், கடுகுவிதை, புளிப்பு மாவு, புதையல், முத்துக்கள், வலை ஆகிய உவமை கள் அன்று வாழ்ந்த மக்களுக்கு விளங்கக்கூடிய அடையாளங்களாய் இருந்தன. பலஸ்தீன நாட்டு மக்களின் பண்பாட்டிலே ஊறியிருந்த அடையாளங்கள் அவை. யூதரின் பண்பாட்டிலேதான் யேசு வாழ்ந்து வளர்ந்து வந்தார். யூதருடைய பண்பாட்டிலே அவர் ஊறியிருந்தா லும், அதனை முற்றிலும் ஏற்றுக்கொண்டவருமல்ல. வெளி வேடத்தை யும், மனிதத்தன்மையில்லாத சட்டங்களையும், அர்த்தமில்லாத அம் சங்களையும், அன்புக்கு மாருன அனைத்தையுமே அவர் எதிர்த்துக் கண் டித்தார். இவை தவிர்ந்த ஏனைய நல்ல யூதப் பண்புகள் அனைத்தை யும் அவர் கடைப்பிடித்தார்.

## 4. யூதரின் இறையரசு:

யூதர்கள் எதிர்பார்த்த மெசியாவும், இறையரசும் இயேசுவின் வெளிப்பாட்டிற்கும், போதனைக்கும் மாருன கருத்துடையனவாய் இருந் தன. இயேசு " மெசியா, அரசன் " என்றழைக்கப்பட்டாலும் அவற் றின் உண்மையான உட்கருத்தை மக்கள் முற்ருக உணரவில்லை. விண் ணரசு அண்மித்து விட்டதாக, அது ஏற்கனவே மக்கள் மத்தியில் இருப்ப தாக இயேசு அறிவித்தார். அண்மித்துவிட்ட இறையரசு இறுதிக் காலத்தில் நிறைவுறும் என்பதையும் அவர் தெளிவுறக் கூறினர். எனவே இறையரசு நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் குறிப்பதொன்ருகத் திகழ்கின்றது. யூதர்கள் எதிர்பார்த்த மெசியாவை அவர்கள் இயேசு விலே காணத்தவறினர். அவர்கள் நம்பியிருந்த அரசு இவ்வுலகிலே விடுதலையும், ஆட்சியும், ஆதிக்கமும் கொடுப்பதாக அமையும் என எண்ணிக் காத்திருந்தனர். இயேசுவின் வருகையோடு இவ்வுலகிலே அண்மித்துவிட்ட இறையரசைத் தெளிவுபடுத்த அவர் பயன்படுத்திய பல அடையாளங்கள் மக்களது வாழ்விலே காணப்பட்டவையாயினும், விசுவாசமின்மையால் மக்கள் அதனை ஏற்க றுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பண்பாட்டின் அவசியம்:

ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைமுறை, கல்வி, கலாச்சாரம், அடையாளங்கள் யாவும் பண்பாடு என்னும் அம்சத்துக்குள் அடங்கும். இறையரசுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பு என்ன? அல்லது பண்பாடு இறையரசுக்கு அவசியமா? இறையரசின் தன்மையை எடுத்து விளக்க இயேசு பயன்படுத்திய அடையாளங்களில் விதைப்பவன் உவமை சற்று விரிவாகவுள்ளது. விதைத்தல், முளைத்தல், வளர்த்தல், பலன் கொடுத்தல் ஆகிய கட்டங்களிலே இறையரசின் வளர்ச்சி புலனாகிறது. இறையரசென்றால் வாழ்க்கைக்கு அப்பால், வரலாற்றுக்கு அப்பால், வருங்காலத்தில் வருவதை எதிர்பார்ப்பதொன்றாய் மட்டும் நாம் கருதமுடியாது. அது இவ்வுலக மண்ணிலே ஒரு சிறிய விதையாக விதைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பண்படுத்தப்பட்டு பலனைத் தருமளவும் நாம் விழித்துக் காத்திருக்க வேண்டும். சமுதாயத்தின் கலை கலாச்சாரம், அடையாளங்கள் மூலமே இந்த இறையரசு வளரமுடியும். மனித வாழ்விலே பின்னிப் பிணைந்து, மனித வாழ்வினூடாகவே இறையரசு என்னும் மறைபொருள் அனுபவத்திற்கும் அறிவுக்கும் உட்பட்டதாக மாறுகின்றது. பண்பாட்டின் அடையாளங்கள் இறையரசைப் புரிந்துகொள்ள மட்டுமல்ல, அதன் வளர்ச்சிக்கும் காரணிகளாகத் திகழ்கின்றன.

## 6. அனைவருக்கும் இறையரசு:

இறையரசு யூத மக்களுக்கு மட்டுமல்ல என்பதை நற்செய்தியாளர்களிலே குறிப்பாக புனித லூக்கா விரிவாக விளக்கியுள்ளார். புறவினத்தார், பாவிகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் ஆகிய அனைவருக்கும் இறையரசு அறிவிக்கப்பட்டுள்ளது.

> "ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்." பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். செபக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே நோக்கிய வண்ணமாய் இருந்தன. அப்போது அவர் "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார் (லூக் *4:18–21*).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருள்தரும் ஆண்டு" இறையரசையே குறிப்பிடுகின்றது. மேலும் 'நீங்கள் கேட்ட இந்த மறைநூல்வாக்கு இன்று நிறைவேறிற்று" என்ற வாக்கியமும் இறையரசு இவ்வுலகிலே ஆரம்பித்து விட்டதை உறுதிப்படுத்துகின்றது. அனைவருக்கும் இறையரசு உரித்தானது என்று குறிப்பிடும்போது அனைவருடைய பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெவ்வேறு பண்பாட்டு அடையாளங்கள் வழியாக இறையரசின் பல்வேறு அம்சங்கள் தெளிவாகத் தென்படுகின்றன,

இறையரசு ஓர் வலைக்கு ஒப்பிடப்படும்போது அது எவ்வாறு அனைத்து மக்களையும் ஈர்த்து ஏற்றுக்கொள்ளுகின்றது என்பதும் புலனாகின்றது இயேசுவின் வருகையோடு ஆரம்பிக்கப்பட்ட இறையரசை மக்களது வாழ்விலிருந்து பிரிக்க முடியாது. அது அனைத்து மக்களுக்கும் பொதுவானதொன்றாக இருக்கின்றது. எல்லா இனத்தவரும் இறையரசை அறிந்து ஏற்றுக்கொள்ள அவரவரின் பண்பாட்டு அடையாளங்கள் பொருள்மிக்கதாகவும் இலகுவானதாகவும் அமைகின்றன.

## 7. பண்பாடும் திருச்சபையும் :

திருச்சபையும் இறையரசும் ஒரே பொருளைக் குறிப்பவையல்ல. இதே வேளையில் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையுமல்ல. திருச்சபை இருப்பதும் இயங்குவதும் இறையரசை அடைவதற்கே. திருச்சபையின் மையமாயிருப்பதும் இறையரசே. இறையரசை அறிவிப்பதே திருச்சபையின் குறிக்கோள். அதனை அறிவிப்பதற்கு திருச்சபையானது ஒவ்வொரு இனத்தினதும் அல்லது நாட்டு மக்களினதும் பண்பாட்டு அடையாளங்களைப் பயன்படுத்த வேண்டும். பரிசுத்த பாப்பரசர் ஆறும் சின்னப்பர் நற்செய்தி அறிவிப்பு என்னும் தமது சுற்றறிக்கையிலே [Evangelii Nuntiandi No. 20] நற்செய்திக்கும் பண்பாட்டிற்குமுள்ள தொடர்பைக் கூறுகின்றார்.

> "நற்செய்தியும், நற்செய்தி பரப்பும் பணியும் பண்பாட்டோடு இணையானவை அல்ல. எந்தப் பண்பாட்டையும சாராந்திராத தன்மையின. இருப்பினும், நற்செய்தி அறிவிக்கும் கடவுளின் அரசில் வாழும் மாந்தர் அனைவரும் அவரவர் சூழலில், அவரவர் நாட்டில், அவரவர் பண்பாட்டில் வாழ்வதால், அவ்வரசு ஒரு பண்பாட்டோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது. எனவே கடவுளின் அரசை நிறுவும்போது, மனித இனப்பண்பாடு அல்லது பண்பாடுகளிலிருந்து கடன்வாங்கிக் கொள்வது தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதது. நற்செய்தியும், நற்செய்தி பரப்பலும் பண்பாடு களைச் சார்ந்திராத தன்மை உடையனதான். ஆனால் அவற் றோடு பொருந்தாத் தன்மையுடையன இல்லை. மாறாக, அவை பண்பாடுகளில் ஊடுருவும் ஆற்றல் உடையன. அதேசமயம் அவை எதற்கும் அடிமையாகாத தனித்துவமும் உடையன.''

## 8. 2-ம் வத்திக்கான் சங்கமும் பண்பாடும்:

கிறிஸ்து மனுவுருவானபோது பாவம் தவிர்ந்த ஏனைய மனி தப் பண்புகள் அனைத்தையும் தமதாக்கிக்கொண்டார். இதன் மூலம் அவர் அனைத்துப் பண்பாடுகளுக்கும் உரியவராகத் தம்மை ஆக்கிக் கொண்டார். பண்பாட்டு மயமாக்குதலுக்கு அடிப்படையாக விளங்கு வது கிறிஸ்துவின் மனித அவதாரம். மனுவுருவான கிறிஸ்துவைப் போன்று திருச்சபையும் பல பண்பாடுகளையும் தனதாக்கிக் கொள்ளல் வேண்டும். பற்பல பண்பாடுகளை அறிந்து ஏற்றுக்கொள்ளாமல் திருச் சபையானது இறையரசை அறிவிக்க முடியாது.

''மனுவுடலேற்பின் மூலம் கிறிஸ்து தாம் கூடிவாழ்ந்த மக்க ளுடைய சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலைகளோடு எவ்வித உணர் வுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டாரோ, அவ்விதமே திருச் சபையும் மீட்பின் மறைபொருள், இறைவனால் வழங்கப்பட்ட வாழ்வு ஆகியவற்றை எல்லோருக்கும் அளிக்க இயலும் வகை யில் இந்தக் குழுக்கள் அனைத்திலும் நுழைந்து இடம்பெற வேண் டும்.'' (மறை அறிவிப்புப் பணி, 10)

பண்பாடு புனிதமானது. ஓர் இனத்தை அல்லது சமூகத்தை இனம் கண்டுகொள்ள உதவுவது பண்பாடு. பரம்பரையாக மக்கள் பண்பாட்டைப் பேணிக்காத்து வளர்த்து வருகின்றனர். பண்பாடு களில் நல்லவையெனக் காணப்படும் யாவற்றையும் திருச்சபை மதிக்க வேண்டும் என்பது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அறைகூவல். பி மறைகளிலே காணப்படும் பண்பாடுகளையும் திருச்சபை ஏற்கவேண் டும் அல்லது அவற்றைப் புனிதமாக்க வேண்டுமெனச் சங்கம் தெளி வாகக் கூறிநிற்கின்றது.

''மனித வாழ்வைச் சார்ந்த பலவகைப் பரிமாற்றங்கள் மற்றும் தொடர்புகள் மூலமாக இக்குழுக்களின் சமூக பண்பாட்டு வாழ் வில் பங்கேற்க வேண்டும்; அவர்களுடைய நாட்டு மரபுகளையும் சமய மரபுகளையும் நன்கறிந்திருக்க வேண்டும்; இம்மரபுகளில் மறைந்திருக்கும் வார்த்தையானவரின் வித்துக்களை மகிழ்ச்சி யோடும் வணக்கத்தோடும் கண்டுபிடிக்க வேண்டும்.''

(மறை அறிவிப்புப் பணி, 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. தமிழ்ப் பண்பாடும் இறையரசும் :

தமிழ்க் கத்தோலிக்கர்கள் விரிந்த நோக்குடன் தமிழ்ப் பண்பாட்டை மதித்து வளர்க்கவேண்டும். தமிழ்மொழி, கலை கலாச்சாரம் இறையரசின் தன்மைகளைப் புரிந்துகொள்ள வழிவகுக்கும். மேலை நாட்டுப் பண்பாட்டில் ஊறி வளர்ந்த தமிழ்க் கத்தோலிக்கர்கள் தமிழ்ப் பண்பாட்டைப் பயத்துடன், சந்தேகத்துடன் தொலைவில் வைத்துப் பார்க்கிறார்கள். இற்றைக்கு 500 ஆண்டுகட்குமுன் இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு வந்த மறைப்பணியாளர் றொபேட் டி நொபிலி ஆரம்பித்த தமிழ் பண்பாட்டுமயம் இன்று வளராமல் மேலும் 500 ஆண்டுக்குப் பின்நோக்கிச் சென்றுள்ளது. தமிழ்ப் பண்பாட்டிலே பொருள்மிக்க அடையாளங்களைக் கொண்டு இறையரசைக் கட்டியெழுப்ப ஒரு சவால் எம்மை எதிர்நோக்கியுள்ளது. கால்நூற்றாண்டுக்குமுன் நடந்தேறிய 2-ம் வத்திக்கான் சங்கத்தின் அறைகூவலைச் சரியாகப் புரிந்திருந்தால், இன்று எம் மத்தியில் ஏற்பட்டிருக்கும் புதுப்பித்தலை நாம் அளவிட முடியாததொன்றாய் இருந்திருக்கும். 2-ம் வத்திக்கான் சங்கம் திறந்துவைத்த வழிகளை பல பரம்பரைப் போக்குடையோர் எதிர்த்து, ஏற்க மறுத்து, அவற்றை மூடி, முடிவு கட்ட முயன்று வருகின்றனர். அன்று இயேசு அறிவித்த இறையரசைப் புரிந்து கொள்ளாமல், ஏற்க மனமில்லாமல் இருந்தவர்களைவிட மோசமான நிலையில் இன்றுவாழும் பரம்பரைப் போக்குடையோர் இருக்கின்றனர். ஒரு சார்பான ரீதியில் 2-ம் வத்திக்கான் சங்கத்தின் போதனைகளைத் திரித்து, மாறுபட்ட கருத்துக்களைக் கூறி முன்னேற்ற வழிக்கு முட்டுக்கட்டைகளாய் இருக்கின்றனர். இறையரசு திருச்சபையின் தனிப்பட்ட சொத்து அல்ல. அனைவருக்கும் பொதுவான இறையரசு அனைத்துப் பண்பாடுகளையும் தன்பால் ஈர்ந்துகொள்ள நாம் தடைமுகாம் போடக்கூடாது.

## 10. பண்பாடுகளின் சங்கமம் :

இறையரசு அனைவருக்கும் சொந்தமானது. எனவே அது அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவானது. இயேசுவின் வருகையிலிருந்து இறையரசு எத்தனையோ பண்பாடுகளை ஊடுருவியுள்ளது. அனைத்தையும் படைத்துக் காத்துவரும் இறைவனின் பிரசன்னமும், ஆட்சியும், ஆதிக்கமும் எல்லாப் பண்பாடுகளிலும் நிறைந்து விளங்க வேண்டும். இறைப்பிரசன்னத்தால் எல்லாப் பண்பாடுகளும் புனிதம் அடையவேண்டும். இறுதிக்காலத்தில் இறையரசு நிறைவை அடையும் போது பண்பாடுகள் அனைத்தும் இறையரசில் சங்கமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் வத்திக்கான் சங்கமும் வளரும் ஆவியியலும்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல்

**ஆய்வுப்பொருள் 3.** அத்துடன் முன்னெருபோதுமில்லாத திட்டங்களும், திருப்பங்களும் சங்கத்தில் எழுந்தன. இவை இன்றைய உலகில் திருச்சபை என்னும் மேய்ப்புப்பணி சார்ந்த கொள்கைத்திரட்டிலும், கிறீஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு, மறைச் சுதந்திரம் என்னும் தீர்மானத் தொகுப்புக்களிலும் காணக்கிடக்கின்றன. இவை யாவும் திருச்சபைக்கு அப்பால் உலக வாழ்வின் அனைத்து மெய்ம்மைகளிலும், ஏன் இடம், காலம் என்னும் எல்லைக்கு அப்பாலும் கூட இறையாவி பிரசன்னமாக இருந்து செயலாற்றுகிறார் என்பதை முன்கூட்டியே அனுமானிக்கின்றன.

**9. திருச்சபை சார்ந்த உண்மைகளுக்கு அப்பால், இப்பிரபஞ்சத்தில் பிரசன்னமாக இருக்கின்ற ஆவி:**
**(Cosmic spirit beyond ecclesial realities)**

திருச்சபைக்கு அப்பாலுள்ள உண்மைகளை நாம் நோக்கும்பொழுது, திருச்சபையானது இவற்றிலிருந்து பிரிக்கப்பட்டதாகவோ, தன்னையே மையமாகக் கொண்டதாகவோ (தன்னை மையமாகக் கொண்டு, அனைத்தும் தன்னை நோக்கி வரச் செய்தல் centripetal) இருக்க முடியாதென்பதையும், உலகில் உலகிற்காக மற்றவர்களை மையமாகக் கொண்டுதான் (தான் என்ற மையத்தினின்று மற்றவர்களை நோக்கிச் செல்லல் centrifugal) அது இயங்க வேண்டும் என்பதையும் காண்கின்றோம். எனவே திருமறை, கலாச்சாரம், சமூக அரசியல் சார்ந்த உலகின் உண்மைகள் யாவும் கிறீஸ்தவ வெளிப்படுத்தலிலும், திருச்சபை வரலாற்றிலும் முன் வைக்கப்பட்டவைகளைவிட, மீட்பு வரலாற்றை ஒரு பரந்த நோக்கில் கண்டுகொள்ள நம்மை அழைக்கின்றன. இப் பொதுவான அல்லது பிரபஞ்சம் சார்ந்த மீட்பு வரலாறும் பரிசுத்த ஆவியின் செயற்பாட்டுத்தளமாக இருக்கின்றது. உலகு பற்றிய சங்கத்தின் நோக்கு மெய்ம்மை சார்ந்தது, முழுமையானது, அதன் இருப்புடன் இணைந்தது. இந்த நோக்கத்தோடு சங்கம், திருச்சபைக்கு அப்பால் உள்ள உண்மைகளுடன் உரையாடல் நிகழ்த்த வேண்டிய கடமையைப்பற்றி பேசாமல் இருக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியானவர் காணக்கூடிய அமைப்புப் பெற்ற திருச்சபையில் மட்டுமல்ல, இதற்கு அப்பால் ஏனைய — மறைகளிலும், கலாச்சாரங் களிலும், கொள்கைகளிலும் (இறைக்கொள்கை, இறையில்லாத கொள் கை, இறை மறுப்புக் கொள்கை) செயலாற்றுகின்றார் என்னும் உண் மையை வத்திக்கான் சங்கம் திடமாக எடுத்துரைத்தது (தி. 16) சங்கத்தின் பொதுவான அணுகு முறையிலும், அதன் ஏடுகளிலும் (இன்றைய உலகில் திருச்சபை, கிறீஸ்தவம் அல்லாத மறைகள், மதச் சுதந்திரம்) இதனைக் காணலாம்.

ஆவியானவர் இயல்பிலேயே மற்றவரை நாடிச் சென்று ஒன்றி ணைக்கும் தன்மையைக் கொண்டவர். இதனை விளங்கி அவரை நாம் உடமையாக்கிக் கொண்டாலொழிய ஓரே தன்மையில்லாத உண்மை களுடன் உரையாடல் நிகழ்த்துவதோ, அவைகளுக்கு மதிப்பளிப்பதோ சாத்தியமாகாது. ஆகவே, அமைப்புப் பெற்ற / நிறுவனம் சார்ந்த / ஆட்சிமுறை கொண்ட அல்லது கல்விமுறை சார்ந்த உரையாடல்களை விட நம்பிக்கை, வாழ்வு பற்றிய உரையாடல்கள் தான் மனித இனத் தின் பொதுவான கதியை நாம் கண்டுகொள்ள துணைபுரியக் கூடியன.

ஏனைய பிரிவினைச் சபைகளுடனும் (ஒ.) மறை சார்ந்த, மறை சாராத கொள்கைகளுடனும் (தி. 8,13,16. கி. ம. , சு. , இ. தி.) திருச்சபை கொண்டிருக்கிற திறந்த மனப்பான்மை பற்றியும் (தி.14,15), உறவு பற்றியும் திருச்சபை என்னும் கொள்கைத் திரட்டில் கூறப்பட்டிருக்கின்றது. இதனோடு சேர்த்து, திருச்சபைக்கு வெளியே மீட்பையும், புது வாழ்வையும் வேண்டி நிற்கின்ற உண்மைகளுடன் உரையாடல் நிகழ்த்த வேண்டும் என்னும் திருச்சபையின் உள்ளரங்க ஆவலையும் சங்கம் திட்டவட்டமாக வெளிப்படுத்தியது. இதனை விளங் கிக் கொள்ள கீழ்வரும் ஏடுகளில் இருந்து சில குறிப்புக்களைத் தருகின் றோம்.

அ) திருச்சபைக்கும், கிறீஸ்தவமல்லாத மறைகளுக்கும் இடையே உள்ள உறவு பற்றிய தீர்மானத் தொகுப்பு.

ஆ) மறைச்சுதந்திரம் பற்றிய தீர்மானத் தொகுப்பு.

இ) இன்றைய உலகில் திருச்சபை என்னும் மேய்ப்புப்பணி சார்ந்த கொள்கைத் திரட்டு.

**10. திருச்சபைக்கும், கிறீஸ்தவமல்லாத மறைகளுக்கும் இடையே உள்ள உறவு பற்றிய தீர்மானத் தொகுப்பு:**

ஆவியானவர் எவ்வாறு சங்கத்தை ஊக்குவித்து மகிழ்ச்சியான ஆச்சரியங்களைக் காணச் செய்தார் என்பதற்கு, இந்த ஏடு உருவாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறே சான்றாகும். யூதர்கள் மேற்சுமத்தப்பட்ட 'இறைவனைக் கொன்ற' பழியை மன்னிப்பதும், யூதர்களை உபத்திரவப்படுத்தும் கிறீஸ் தவர்களின் செயல் நீதியானது என்று, பரிசுத்த வேதாகமத்தை மேற் கோள்காட்டுவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுமே இவ்வேட்டின் முக்கியநோக்கங்கள் ஆகும்.

இந்த ஆவலானது பழைய ஏற்பாட்டு மக்களுடன் திருச்சபைக் குள்ள உறவை நன்கு பரிசோதித்துப் பார்க்க அவர்களை வழிநடத்தி யது. கடந்த காலத்தை உற்று நோக்குவதைவிட, உரையாடல் வழி யாக ஒருவர் ஒருவரைப் புரிந்து மதிப்பளிப்பதை சங்கத் தந்தையர் ஊக்குவித்தனர். யூதர்கள் வாழும் இடங்களில் இருந்துவந்த ஆயர்கள் திருச்சபைக்கும், யூதர்களுக்குமிடையே உள்ள உறவில் மட்டுமே தனிப் பட்ட அக்கறை காட்டிய அதேவேளையில், உலகின் ஏனைய பாகங்களி லிருந்து வந்த ஆயர்கள் ஏனைய உலக மறைகளுடன் திருச்சபைக்குள்ள உறவின் மட்டில் கவனம் செலுத்தினர். இத்தகைய பரந்துபட்ட கரி சனை, தமது மேய்ப்புப் பணிசார்ந்த வேதபோதக ஆர்வத்தைப் பலவீ னப்படுத்தக்கூடும் என சிறுபான்மையினர் உணர்ந்த பொழுதிலும், பெரும்பான்மையினர் உலக மறைகளில், கலாச்சாரங்களில் காணப்படும் வளமான விழுமியங்களின்மட்டில் திருச்சபைக்குள்ள மதிப்பையும் அத ஞல் ஓர் உலக சமூகத்தை உருவாக்கலாம் என்னும் நம்பிக்கையையும் துணிவோடு வெளிப்படுத்தினர்.

மனித இனம் முழுவதும் ஓர் ஆரம்பம் (படைப்பு), ஓர் இறை வன், அவரது பராமரிப்பு, வெளிப்படுத்தல், மீட்புத்திட்டம் என்பவற் றைக் கொண்டிருக்கின்றது என்னும் கருத்து அனைத்து மக்களுக்கும் பொதுவானது. வாழ்வு பற்றியும், அதன் அர்த்தம், நோக்கம், முடிவு என்பன பற்றியும் மனிதன் எழுப்பும் இறுதியான வினாக்களுக்கு விடை யளிக்கவே அனைத்து மறைகளும் முயற்சிக்கின்றன. (கி. ம. 1)

மானிட நிகழ்ச்சிகள் மீதும், பொருட்கள்மீதும் அசைவாடிக் கொண்டிருக்கும் ஆவியானவரின் மறைவான சக்தியை நாம் கண்டு கொள்வதுடன், சிலவேளைகளில் மேலான தெய்வீகம் ஒன்று இருப்ப தையும், ஏன், மேலான ஒரு தந்தை இருக்கிறார் என்பதையும் கண்டு ணர முடிகிறது. இத்தகைய அகக் காட்சியும், அடையாளம் காணும் உணர்வும் சேர்ந்து, ஆவியில் அனைவரும் ஒன்று என்னும் ஆழமான மறையுணர்வுக்கு இட்டுச் செல்கின்றது.

எடுத்துக்காட்டாக இந்து மதத்தில் ஒருவர் தப முயற்சிகள், தியானங்கள், இறைவனிடம் சரணடைதல் (மோட்சம்) என்பவை வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக, தனது வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து விடுதலையைத் தேடுகின்றார். பௌத்த மதமும், மாறிக் கொண்டு போகும் இந்த உலகின் நிறைவற்ற தன்மையைக் கண்டு தனது சொந்த முயற்சியினால் அல்லது வேறு மேலான உதவியினால் (கி.ம. 2) முழுமையான சுதந்திரத்திற்கும், மேலான அறிவொளிக்கும் (நிர்வாண நிலை) இட்டுச் செல்லும் பாதையைத் தேடுகின்றது.

எனவே இம்மறைகளில் காணப்படும் உண்மை எதுவோ, தூயது எதுவோ அவைகளில் எவற்றையும் திருச்சபை தள்ளி விடுவதில்லை. இம்மறைகள் சாத்தானின் வேலை என்ற சந்தேகத்திற்கும் இடமளிப்பதில்லை. மறைப் போதகப்பணியும், மத மாற்றமும் ஒன்று எனக் கருதுகின்ற சோதனையையும், வெற்றிகொள்வதுடன், நேர்மையான மதிப்பு, விவேகமும் அன்பும் கலந்த உரையாடலும் ஒத்துழைப்பும், ஆன்மீக ஒழுக்க நலன்களையும் ஏனைய மறைகள் கலாச்சாரங்கள் சமுதாயங்களில் காணப்படும் விழுமியங்களையும் ஏற்று, பாதுகாத்து விருத்தி செய்தல் என்பவை பற்றியும் திருச்சபை பேசுகின்றது.

இதேபோல முஸ்லிம்கள் விடயத்திலும் பழைய சிலுவைப் போர்களை மறந்து, நமது பொதுவான ஆரம்பத்தை நினைவுகூருமாறு அழைப்பது மட்டுமல்ல ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டு சமூக நீதி ஒழுக்க விழுமியங்கள், சமாதானம், சுதந்திரம் போன்றவற்றில் பொது நோக்கை வைத்து முயற்சிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்துகின்றது.

ஏனைய மறைகளுடன் திருச்சபைக்குள்ள உறவு தொடர்பாக ஏடுகளில் தரப்பட்டிருக்கும் திறந்த மனமும், நேர்மையும், நல்லது காணும் தன்மையும் நிச்சயமாக இறை ஆவியின் வேலையே, இந்நல்லது காணும் தன்மையை செயலில் கொண்டு வந்து முற்றுப் பெறச் செய்ய வேண்டுமானால் இவ்வியக்கத்தின் காரண கர்த்தாவைப்பற்றியும், அவரது தொடர்ச்சியான பிரசன்னத்தைப்பற்றியும், நமது மத்தியில் அவரது செயற்பாட்டைப் பற்றியும், மேலும் அறிந்து கொள்வது அவசியம்.

## 11. மறைச் சுதந்திரம் பற்றிய தீர்மானத் தொகுப்பு:

இத்தீர்மானத் தொகுப்பு விவாதத்திற்குரிய ஒன்றாக இருந்தது. இதனை ஆராயும் பொழுது, 1864 இல் திருச்சபையானது 'தப்பறைகளின் பட்டியலை' (Syllabus of Errors) வெளியிட்டபோது கொண்டிருந்த மனப்பான்மையிலிருந்து 2-ம் வத்திக்கான் சங்கம் ஒரு நீண்ட அடி முன்னேற்றி வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகு சார்ந்த உண்மைகளிலும், திருச்சபை சார்ந்த உண்மைகளிலும் 2-ம் வத்திக்கான் சங்கம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை: அதாவது கத்தோலிக்கர் சிறுபான்மையினராக உள்ள சூழலில் சுதந்திரத்திற்காகப் போராடும் அதே வேளையில் பெரும்பான்மையினராக உள்ள சூழலில் சலுகைகளைத் தேடுவது போன்ற இரட்டை நிலைப்பாட்டை 2ம் வத்திக்கான்சங்கம் கொண்டிருக்கவில்லை. பதிலாக, மனித மகத்துவத்தின் அடிப்படையில், பொறுப்புள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தமது சொந்தத் தீர்ப்பின்படி செயற்படுவது அனைவரினதும் கடமை என்பதைச் சங்கம் ஏற்றுக் கொள்கிறது. 23ஆம் அருளப்பர் 'அவனியில் அமைதி' என்னும் சுற்று நிருபத்தில் கூறியதைப் பின்பற்றிச் சங்க ஏடுகள் ''மனிதனின் மாண்பை இன்றைய மக்கள் நாளுக்கு நாள் அதிகமதிகமாக உணர்ந்து வருகின்றனர். எல்லா மக்களும் உண்மையைத் தேடவும் ... கண்டடைந்த உண்மையை ஏற்கவும், அதன்படி ஒழுகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்'' (சு.1) எனக் குறிப்பிடுகின்றன.

## 12. இன்றைய உலகில் திருச்சபை என்னும் மேய்ப்புப்பணி சார்ந்த கொள்கைத் திரட்டு:

சங்க மண்டபத்திலேயே கருவாகிப் பிறந்த இவ்வேடு, திருச்சபையின் வரலாற்றிற் பிறந்த ஏனைய ஏடுகளைவிட, எவ்வாறு திருச்சபை இந்த உலகில், உலகிற்காகப் பிரசன்னமாக இருந்து செயலாற்றி வருகின்றது என்பதை கூடிய விதத்தில் விளக்குகின்றது. உலகினோடும் அதன் உண்மை நிலைகளோடும் நேர்மையான முறையில் தன்னை ஒன்றுக்குவதோடு ஆரம்பித்து அனைத்து மக்களையும், மறைகளையும், கலாச்சாரங்களையும், கொள்கைகளையும், நீதி சமாதானம் நிலவும் சமூக பொருளாதார வாழ்வையும் கொண்ட முழுமையான ஓர் உலகினைக் காண்கின்றது. வரலாற்றில் இல்லாத உண்மைத் தன்மை, முழுமை நிலை, ஆழம் என்பவற்றோடு, சகல மனிதருடனும், கடவுள் மறுப்புக் கொள்கையினருடனும் கூட உரையாடல் நிகழ்த்தவும், அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கவும் கூடிய ஒரு கிறிஸ்தவக் கண்ணோட்டத்தைத் தருகின்றது. கிறிஸ்தவம் அல்லாத உண்மைகளின் மத்தியில் மெசியாவுக்குரிய தனது உறுதியை இழந்துவிடாது, திருச்சபை இதனைச் செய்ய முடியும். இறுதியான உண்மைகள் தன்னிடமே உள்ளன என்றோ, தன்னை மையமாக வைத்தே நோக்கவேண்டும் என்றோ ஒருபொழுதும் வற்புறுத்தலாகாது. ஒரே அரசை நோக்கிய (பிரபஞ்சம் சார்ந்த / பொதுவான மீட்பு வரலாறு) (இ.தி. 45) பயணத்தில் மானிட சமூகத்திற்கான ஒரு பொது நோக்கையும், பொது முயற்சியையும் இலக்காகக் கொண்டு இதனைச் செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. ஆவியைப் பின்செல்ல பொதுவான உந்தல் :**

இன்று பல்வேறு மறைகளிடையே விடுதலை, உண்மை என்பவற்றை நாடுகின்ற மறைசார்ந்த உந்தல் காணப்படுகின்றது. எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி சுதந்திரமாக இறைவனைத்தேடி, பொறுப்புடன் செயலாற்ற விரும்புகின்ற மானிட உந்தலும் சமாதானம், நீதி, சுதந்திரம் என்பவற்றை நோக்கிய பொதுவான தாகமும் அனைத்து மக்களிடையே காணப்படுகின்றன இவை வெளிப்படையாகத் தெரிவது மட்டுமல்ல, அதிகரித்துக்கொண்டும் வருகின்றன. இவை யாவும் நல்ல ஆவியின் வெளிப்பாடுகளேயாகும். இந்த ஆவி, கத்தோலிக்க திருச்சபையில் வாழுகின்றார் (தி. ஆ. சு. 1ச). திருச்சபையின் வழிபாடு, திருவருட்சாதன வாழ்வு முதலியவற்றில் செயலாற்றுகின்றார். இத்துடன் ஆவியானவரின் செயற்பாடு நின்றுவிடுவதில்லை. இதற்கு மேலாகவும் செயலாற்றுகின்றார்; இதற்கு அப்பால் நம்மை வழிநடத்துகின்றார். அவர் செல்லுமிடமெல்லாம் அவரைப் பின்செல்ல, நமக்கு புதிய விளக்கமும், தைரியமும் தேவைப்படுகின்றது.

ஆய்வுப்பொருள் 4 : வத்திக்கான் சங்கத்தின் திட்டங்கள், திருப்பங்களால் வேண்டப்படுகின்ற ஆவியியலை, முன்னைய கிறிஸ்து இயல்களையொத்த ஓர் ஆவியியலால் இனிமேலும் ஈடுசெய்து விட முடியாது. ஏனென்றால் அவை ஒன்றோடொன்று தொடர்பற்ற வெறும் மறைக் கூற்றுக்களாகத்தான் இருக்கின்றன. திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் (இடம்), கிறிஸ்து — நிகழ்ச்சியின் முன்னரும் பின்னரும் (காலம்) வாழ்ந்து செயலாற்றுகின்ற ஆவியைப்பற்றிய ஒரு பரந்த ஆய்வினால் மாத்திரமே இத்தேவையை ஈடுசெய்ய முடியும்.

**14. சரியான ஆவியியல் இல்லாமை :**

இறைவனைத் தந்தையாகவும், இயேசுக்கிறிஸ்துவை மைந்தனாகவும் எடுத்துக்காட்டும் விளக்கவுரைகள் பெருந்தொகையாக இருந்தபோதிலும், ஊக்கம் தரக்கூடிய தெளிவான ஓர் ஆவியியல் தேவை என்பது பெரிதும் உணரப்படுகின்றது. (முன்னைய காலந்தொட்டு — புனித அகுஸ்தீனார், பசில், அலெக்சாந்திரியா கிளெமென்ற், பொயிற்றியர்ஸ் கில்லறி, 13ஆம் லியோ போன்ற தந்தையர்கள் இத்தேவையை வெளிப்படுத்தினர்). கிறிஸ்து இயலிலும், மீட்பு இயலிலும் முறையே கிறிஸ்துவின் ஆட்தன்மை பற்றியும், அவரது செயல்கள் பற்றியுமே பேசப்பட்டன. இவைபற்றிய மிகைப்படுத்தப்பட்ட சத்தியங்களும், திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் எனக் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கருத்துக்களும் எழுந்தன (இது பிற்பட்ட காலத்தில் எழுந்தது). இக்காரணங்களால், ஆவியும் திருச்சபையில் அவரது பிரசன்னம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு என்பனவும் கவனிக்கப்படாது விடப்பட்டன. பரிசுத்த ஆவியின் ஆட்தன்மை, அடையாளம், செயற்பாடு என்பவைபற்றி 'இருளில் உலவும் நிலை' ஏற்படக் காரணம் இறையியலில் பொதுவாக இருந்த தப்பித்துக் கொள்ளும் தன்மையாகும். ஏனென்றால் ஆவியானவர் புலப்படக்கூடாத, மறைந்த தன்மைகொண்டவராக இருப்பது மட்டுமல்ல, அவரைப்பற்றிய வேதாகம சாட்சியங்களும் போதிய சிந்தனையொளியைக் கொடுக்கவில்லை. வேதாகம சாட்சியங்கள் ஆவியைப் பற்றிய ஒரு பொதுவான விளக்கத்தை அளிப்பதாகவும், வெளிப்படுத்தல் தொடர்பாக இது போதிய அத்தாட்சியாகவுமே தோன்றியது. ஆவியைப்பற்றிய இந்த முறைசாராத வெளிப்படுத்தல் நம்மை ஒன்றில் மிகைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக்கு அல்லது விவேகத்துடன் கூடிய அமைதிக்கு இட்டுச் சென்றது. ஒரு நல்ல ஆவியியல் இல்லாமைக்கு இன்னுமொரு காரணம், இடைக்கால இறையியலாளர் எதிர்பார்த்தபடி, பரிசுத்த ஆவியின் விடயத்தில் அவரைக் கண்டுகொள்ளல், அவரது சிறப்பியல்பு, செயற்பாடு என்பவை பற்றிய உண்மைகள் தெளிவற்றவையாக இருந்தமையாகும்.

15. இறையியலில் ஏற்பட்ட இடைவெளிக்காக இரங்கல் (Lament over a theological lacuna):

மெய்யியலில் 'being' என்பதைக் கற்காமல் கைநெகிழ்ந்ததனால் ஏற்பட்ட இடைவெளிக்காக ஹைடெக்கர் இரங்கியதுபோல, இறையியலில் பரிசுத்த ஆவியைப்பற்றிக் கற்காததால் ஏற்பட்ட இடைவெளிக்காக பல இறையியலாளர் கவலைப்படுகின்றனர். நமது நாளாந்த வாழ்வில் ஆவியானவர் மிக அண்மையில் இருந்தாலும், இறையியல் கண்ணோட்டத்திலிருந்து தவறிவிட்டவராகவோ, மறைத்து வைக்கப்பட்டவராகவோ இருக்கின்றார். நமது கடந்தகால இறையியல் கருத்துக்கள் பலவற்றிற்கு இவ்விடயம் "இரவல் வாங்கப்பட்ட ஓர் அனுமானமாக" இருந்தது. தந்தையினதும், மைந்தனதும் பணிகளுடன் ஒப்பிடும்பொழுது, ஆவியின் பணி இரண்டாம் தரமானதாகவும், முந்தியவைகளை நிறைவு செய்ய ஏற்பட்டதாகவும், வருந்தி ஊகித்துப் பெற்றுக் கொண்டதாகவும் காணப்பட்டது.

16. தொடர்ந்து ஆவியானவர் மாத்திரமே நமக்குத் துணைபுரிய முடியும்:

திருச்சபையின் கடந்தகால பிடிவாத குணமும், பெரிய நிறுவனம் என்ற முறையில் அதன் சட்டங்களும் சேர்ந்து காலத்தின் அறிகுறிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவிட்டாலும், அவைகளை விளங்கிக்கொள்வதற்குக்கூட திறனற்றவையாய் இருந்தன. காலத்தின் அறிகுறிகளைக் கண்டுகொள்ள 23ஆம் அருளப்பர் விடுத்த அழைப்பு சங்கத்தைத் தூண்டி, திருச்சபை அதன் ஆவியைத் தேடும் முயற்சியை ஊக்குவித்தது. ஆவியானவர் மாத்திரமே காலத்தின் சவால்களைப் புரிந்துகொண்டு, உய்த்துணர்ந்து, அவற்றிற்குப் பதிலிறுக்க வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆவியியல் :

வத்திக்கான் சங்கம் பரிசுத்த ஆவியைப்பற்றி வெளிப்படையாகவோ, நேரடியாகவோ எவ்வித சத்தியங்களையும் கொடுக்க முயற்சிக்காவிட்டாலும், பரிசுத்த ஆவியைப் பற்றியும், ஆவியால் நிரப்பப்பெற்ற திருச்சபை பற்றியும் ஒரு புதிய முறையில் பேச சில முக்கிய முயற்சிகளை எடுத்தது. இதுபற்றி நமது இன்றைய பரிசுத்த தந்தை பின்வருமாறு கூறுகிறார் : "இச்சங்கத்தின் படிப்பினைகள் யாவும் தன்னிலேயே 'ஆவியியல் சார்ந்தவை'. பரிசுத்த ஆவி திருச்சபையின் ஆன்மா. இவ்வுண்மையால் சங்கம் ஊடுருவப்பட்டுள்ளது ...... வரலாற்றின் இன்றைய நிலையில் ஆவியானவர் திருச்சபைகளுக்கு எதைச் சொல்ல விரும்புகிறாரோ அவையனைத்தும் இச்சங்கத்தில் அடங்கியுள்ளன ஆலோசனை அளிப்பவரான பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தைச் சங்கம் சிறப்பாக உறுதிப்படுத்தியுள்ளது. இக்கட்டான இக்காலத்தில் ஆவியானவரைப் புதிதாக 'பிரசன்னமாக்கி'யுள்ளது." (பரிசுத்த ஆவி பற்றிய சுற்றுமடல் எண் 26 — 2 ஆம் அருள் சின்னப்பர்).

எனவே, நமது இன்றைய ஆவியியல் வத்திக்கான் சங்கத்தின் திறந்த மனதையும், ஆவலையும் கொண்டிருக்க வேண்டும். அதாவது, பரிசுத்த ஆவியை படைப்பு, மீட்பு, நிறைவு என்னும் செயற்பாடுகள் கொண்ட முழுமையில் அறியவேண்டும். உலகில், திருச்சபையின் இன்றைய கட்டத்தில் அவரது செயல்ரீதியான பங்கைப்பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டும்.

18. அவசர ஆவியியல் வேண்டாம் :

நமது உற்சாகத்திலும், உத்வேகத்திலும் ஒரு புதிய ஆவியியலை உருவாக்க முற்படும்பொழுது சில ஆபத்துக்களும் உண்டு. நீண்ட காலமாக ஆவியியலில் இருந்த இடைவெளியைச் சரிப்படுத்துவதற்காக சிலர் சில கோணங்களிலிருந்து தெரிவிக்கின்ற கருத்துக்களை வைத்துக் கொண்டு போலியான இலக்குகளை அல்லது வடிவங்களைக் கொண்ட ஆவியியலை உருவாக்கும் ஆபத்தில் விழாதிருப்போமாக. சிலர் கிறிஸ்துவுக்குரிய பண்புகளையும், செயற்பாடுகளையும் பரிசுத்த ஆவிக்கும் கொடுத்து, கிறிஸ்து இயலின் போக்கில் அல்லது அதற்குச் சமமான ஆவியியலை உருவாக்க முனைகிறார்கள். சிலர் கிறிஸ்து இயலையும், ஆவியியலையும் சமமாக்குகின்ற ஓர் ஆவியியலை உருவாக்க முயலுகிறார்கள். மத்தியகாலக் கட்டிடக்கலையில் அழகையும் ஒரே சீரான அமைப்பையும் கருதி 'போலி சாளரங்களை' உருவாக்கிய கட்டிடக் கலைஞர்களைப் போன்று, இவர்களும் இறையியலில் 'போலி சாளரங்களை' உருவாக்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. இதிலிருந்து வெளியேற சின்னப்பர் காட்டும் வழி (Paul shows the way out):

ஆவியியல் சார்ந்த கிறீஸ்து இயல் ஒன்றிற்கு அத்திவாரமிடும் வேளையில் புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்களுக்குள் வெற்றி பெறுபவர் சின்னப்பர் (தமது கிரேக்க மெய்யியல் சிந்தனையின் துணையுடன்) கிறீஸ்துவுக்கும், ஆவிக்கும் இடையிலுள்ள இணைப்பைக் கண்டு கொள்வதில் அவரது உள்ளுணர்வு செயற்படுகின்றது. தமது இறையியலுக்கு இவ்விணைப்பை ஆரம்ப நிலையாகக் கொள்ளுகிறார். நாம் சோர்ந்து போகாது ஒரு புதிய ஆவியியலை அமைப்பதற்கான வருங்கால முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இவை அனைத்தும் நமக்கு உற்சாகமூட்டுகின்றன.

## 20. இணைப்பு ஆவியியல் (Contact Pneumatology)

இறைவனுக்கும், மனுக்குலத்திற்கும் இடையில், தெய்வீகத்திற்கும் மனிதத் தன்மைக்கும் இடையில் இடம் பெறுகின்ற பரிசுத்த ஆவியின் இணைப்பு அலுவலைச் சின்னப்பர் கண்டு கொள்கிறார். அந்த இணைப்புத் தானத்தில் கிறீஸ்துவை நிறுத்துகிறார். இவ்வாறு கிறீஸ்துவினதும், மூவொரு கடவுளினதும் மறைபொருள்களுக்குள் நுழையும் தானமாகவும் பரிசுத்த ஆவி விளங்குகின்றார். ஆவியின் துணைபெற்று, அவரால் ஆட்கொள்ளப்பட்டாலன்றி கிறீஸ்துவினதும், மூவொருகடவுளினதும் மறைபொருள்களுக்குள் நாம் நுழையவோ, அவற்றை அனுபவிக்கவோ முடியாது. எனவே, ஆவியிலேதான் நாம் கிறீஸ்து மூலமாகத் தந்தையிடம் வழிநடாத்தப்படுகிறோம்.

## 21. ஆவியியல் — மூவொரு கடவுளுக்குள், கிறீஸ்து இயலுக்குள், இறுதிக் காலம் பற்றிய கோட்பாட்டுக்குள் செல்லும் நுழை வாயில் (Pneumatology — point of entry into Trinity, Christology and Eschatology):

தூயஆவி பற்றிய ஓர் இறையியலை அமைக்கும்போது ஒருவர், இறைவனைப்பற்றிய அன்றேல் மனுக்குலத்தைப்பற்றிய சிந்தனையுடன் ஆரம்பிப்பதில்லை. இறைவனும், மனிதனும் ஒருவரை ஒருவர் தொடுகின்ற நிலையிலேதான் ஆரம்பிக்கின்றார். இவ்வாறு இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள இணைப்புத்தானமாக விளங்குபவர் வரலாற்றில் அனுபவிக்கப்படுகின்ற ஆவியானவர்தான். எனவே, 'கிறீஸ்தவ' மீட்பு வரலாற்றில் காணப்படும் ஆவியானவரின் பங்கு — அதாவது, இஸ்ராயேல் மக்களின் வரலாற்றிலும் அவர்களது தலைவர்களின் வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்றிலும், மைந்தன், ஆவி என்போரின் பணிகளான புதிய ஏற்பாட்டு நிகழ்சிகளிலும் காணப்படுகின்ற ஆவியின் செயற்பாடுகள் யாவும் நமக்கு அத்திவாரமான ஆரம்ப நிலைகளாக இருக்கின்றன. இவ்வாறு கிறீஸ்தவ மீட்பு வரலாற்றினுள் ஆவியின் பங்கை அறிந்து கொள்வதானது, இரு கோணங்களில் அவரை அறியும் ஒரு 'நுழைவாயிலாக' அமைகின்றது. ஒரு கோணத்தில் மூவொரு கடவுளின் தன்மையில் தந்தையினதும், மைந்தனதும் மறைபொருளை மேன்மேலும் அறிந்து கொள்வது மறு கோணத்தில் இன்றைய திருச்சபைகளிலும், இவற்றிற்கு அப்பாலும் செயலாற்றுகின்ற ஆவியைப்பற்றியும் (ஆவியியல் சார்ந்த திருச்சபையியல் Pneumatic — Ecclesiology) வரப்போகும் இறுதிக்கால நிறைவில் தொடர்ந்து செயலாற்றுகின்ற ஆவியைப்பற்றியும் (ஆவியியல் சார்ந்த இறுதிக்கால இயல் (Pneumatic Eschatology) அறிந்து கொள்வதாகும்.

எனவே, ஆவியியலானது ஆவியானவரின் செயற்பாடுகள் யாவற்றையும் ஏற்று, அவைகளை ஆழமாக அறிவதாகும்.

1) முழுமையான/பொதுவான மீட்பு வரலாற்றில் இறைவனுக்கும், மனிதனுக்கும் இவையே நிலவும் அனைத்துலகு சார்ந்த செயற்பாடு universal contact — function)

2) தனிப்பட்ட கிறீஸ்தவ மீட்பு வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டது போன்று இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே நிலவும் ஆவியின் வரலாற்றுத் தொடர்புச் செயற்பாடு. (historical-contact fn)

3) சகலத்தையும் இரண்டாம் வருகையிலும், இறுதி இறையரசிலும் மீள நிறைவுபடுத்தும் இறுதிக்கால நிறைவு சார்ந்த செயற்பாடு (eschatological contact fn)

இவ்வாறு வேதாகமத்தில் அனுபவிக்கப்படுகின்ற ஆவியியலானது ஒரு முடிவல்ல; மாறாக 'அ'கரம் தொடக்கம் 'ன'கரம் ஈறாக இறைவன் — மனிதன் உறவின் ஆழ, அகல, நீளங்களை ஆராயும் செயல் நோக்கிய ஒரு தொடக்கமாக அன்றேல் நுழைவாயிலாக அமையும் ஒன்று.

**22. ஆவியியல் — னியாகப் பிரிக்கப்பட்டதல்ல; ஏனையவற்றோடு தொடர்பற்றதுமல்ல; அனைத்தையும் ஊடுருவிச் செல்வது (Pneumatology — not separate and Compartmental but an all pervading perspective) :**

கிறீஸ்து இயலையோ ஏனைய இறையியல் விஞ்ஞானங்களையோ போன்று ஆவியியலும் ஆவியைப்பற்றிய தனிப்பட்ட, நிறைவான ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத் துறையாக இராமல், இறையியல் முழுமைக்கும் விளக்கம் அளிக்கும் தன்மை கொண்டதாக அமையட்டும் (hermeuneutic) இது எந்த வகையிலும் இன்றைய கிறீஸ்து இயலை ஒத்ததாகவோ, அதற்குரிய இடத்தை மாற்றியமைப்பதாகவோ இருக்கமாட்டாது. இதன் பகுப்பாய்வுக்கு மையப்பொருள் எதுவும் இல்லை (objectified — focus). இது இறையியல் முடிவுறும் இடமுமல்ல; மாருக, மைந்தன் மூலமாகத் தந்தையை எவ்வாறு அடைய முடியும் என்னும் வழியைத்தான் காட்டுகின்றது. இறையியல் மீது ஆவியியலுக்கிருக்கும் அறிவிக்கும் தன்மை (in-forming) சார்ந்த செல்வாக்கினுல் சகல இறையியற் துறைகளும் அதிகளவு ஆவிக்குரியவையாகவும், குறைந்தளவு கோட்பாடுகள் சார்ந்தவையாகவும் மாறுகின்றன. இறைவனைப்பற்றியும், அவரது திரீத்துவ இயல்பைப்பற்றியும் இறைவெளிப்பாடு தரும் அறிவானது மூன்றும் ஒன்ருன இறைவனின் ஆவியைப்பற்றிய நெருக்கமான அறிவின் விளைவாகும். இது வெறும் புத்தியினுலும், அதன் மெய்யியலினுலும் அல்ல; மனிதனுக்குள்ளேயே இருக்கும் தெய்வீக ஆற்றலாகிய நெருக்கமான இறை அனுபவத்தாலேயே அமைகின்றது.

இவ்வாறே கிறீஸ்து இயலும், அவரது ஆட்தன்மை, அறிவு, உணர்வுநிலை என்பவற்றைப்பற்றிய சத்தியங்களின் மாருத்தன்மைகளைக் காப்பதைவிட ஆவியோடு சார்ந்த – அதாவது, இயேசுவின் மனிதத் தன்மையோடு கொள்ளும் விசுவாச அனுபவத்திலிருந்து கிறீஸ்துவை விசுவாசத்தில் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மாறுகின்ற கிறீஸ்து இயலாக (Spirit-Christology 'from below') அமையும். இந்த ஆவியியல் வளர்ச்சி ஒரு புதிய விஞ்ஞானத்தைப் பிறப்பிக்கவில்லை; மாருக, ஆவியின் புதிதான ஏவுதல்கள் வாழ்வு முழுவதையும், அனைத்து இறையியல் விஞ்ஞானங்களையும் ஊக்குவித்து வளம்பெறச் செய்கின்றன.

**23. வரலாற்று நிகழ்ச்சிகள் தொடக்கம் வரலாறு கடந்த நிகழ்ச்சிகள் வரை ஆவியின் செயற்பாடு (From the historical to the super-historical events of the Spirit):**

மீட்பு வரலாற்றில் (ப. ஏ., பு. ஏ.) கூறப்பட்டுள்ளபடி, வரலாற்றில் இறைத்தொடர்பை நமது ஆரம்ப நிலையாகக் கொள்வதற்கு ஆழமான விசுவாச உறுதியோடு இயேசுக் கிறீஸ்து—நிசழ்ச்சியை மீண்டும் கருத்திற் கொள்ளவேண்டும். ''பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன்'' —அதாவது, வரலாற்றின் மாபெரும் செயற்பாடுகளான இயேசுக் கிறீஸ்துவின் உற்பவம், பிறப்பு, பாஸ்கு மறைபொருள் என்பவற்றின் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தாவான ஆவியானவரை, வரலாற்றில் முக்கியமானவரான ஆவியானவரை விசுவசிக்கிறேன். விசுவாசத்தின் மூலம் ஆவியானவரின் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குள் நம்மை உறுதியாக நிலைநிறுத்தினால்தான், அவரது வரலாறு கடந்த நிகழ்ச்சிகளுக்குள், இறுதிக்கால நிகழ்ச்சிகளுக்குள் துணிந்து செல்ல முடியும். வேறு வார்த்தையில் கூறினால், ஆவியின் துணையோடு மட்டும் தான் நாம் கிறீஸ்து இயல், மூவொரு கடவுள் இயல் என்பவை சார்ந்த மறைபொருள்களின் ஆழத்தில் இறங்குவதுடன் மறுமை பற்றிய வருங்காலத் திட்டங்களையும் விளங்கிக்கொள்ள முடியும். வரலாற்றில் ஆவியின் கட்புலனுக்கு வெளிப்படையான தலையீடுகளுடன் கட்புலனுகா செயற்பாடுகளையும் இணைக்க வேண்டும். உண்மையின் ஆவியால் ஊக்கம் பெற்ற ஓர் உண்மைக் கிறீஸ்தவன் சுயநலவதியாகவோ, இருக்கமாட்டான். அனைத்தையும் தழுவுகின்ற ஆவியைக் கொண்டவனுக, அனைவருக்கும் உரியவனுக பரந்த நோக்குடையவனுக (cosmic Christian) இருப்பான்.

## 24. வெளிப்படுத்தப்பட்டது வெளிப்படுத்தப்படாதநின் ஒரு பகுதி மாத்திரமே (The Revealed is only a part of the unrevealed) :

ஒரு குறிப்பிட்ட கிறீஸ்தவ வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் என்ற முறையில், ஒரு குறிப்பிட்ட சமயத்தை – அதாவது கிறீஸ்தவத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்ற முறையில், நாம் நமது திருச்சபைகளின் சடங்குகள், விசுவாச சத்தியங்கள் என்பவை பற்றிய நுணுக்கங்களில் அமிழ்ந்து விடுவதனுல், இச்சடங்குகளுக்கும், விசுவாச சத்தியங்களுக்கும் பின்னணியாக இருக்கின்ற முக்கியமான ஆன்மீக உண்மைகளை நாம் காணத் தவறிவிடுகிறோம். வார்த்தையிலும் இறையரசிலும் காணப்படுகின்ற வெளிப்படுத்தல்களைவிட, இறைவன் தாமே மாபெரும் உண்மையாக இருக்கின்றூர். இவ்வாறே திருச்சபையைவிட இறையரசும், தனிப்பட்ட தல குழுக்களைவிடத் திருச்சபையும் மேலானவை. இறைவன் → வெளிப்பாடு → இயேசுக்கிறீஸ்து → இறையரசு → திருச்சபை → தலத்திருச்சபை. மீட்பும், பரிசுத்த தனமும் சிலவேளைகளில் வழிபாட்டு முறைகளோடும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது குழுவின் பக்தி முயற்சிகளோடும் கலந்து ஒன்றுக்கப்பட்டு விடுவதால், பரந்த உண்மைகள் மேலெழுந்த வாரியாக நோக்கப்படுகின்றன, அன்றேல் ''நீர் மட்டத்தின் கீழ்ப் பனிக்கட்டி'' இருப்பது போன்று அடிமட்டத்தில் உறையவிடப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்படுவதை, அந்த வெளிப்பாட்டின் ஊற்றிேேடு ஒப்பிட்டுப் பார்க்கையில், வெளிப்படுத்தப்படுவது அந்த உண்மையின் ஒரு பகுதியாக மாத்திரமே இருப்பதைக் காணலாம். இயேசுக்கிறிஸ்துவிலும், அவர் தொடக்கிவைத்த இறையரசிலும் வெளிப்படுத்தப்பட்ட மீட்புத் திட்டத்தின் வழியாக இறைவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்துகின்றூர். கிறிஸ்துவின் இப்பணியை ஏற்றுக்கொள்ளும்படி ஆவியிஞல் உந்தப்பட்டவர்கள் ஒரு குழுவாக அமைக்கப்பட்டு திருச்சபை என அழைக்கப்பட்டார்கள். ஏனைய திருச்சபைகளின் மறைசார்ந்த தன்மையைக் குறைவாக மதிப்பிடாதபடி அவைகளை உள்ளடக்கிய வகையில் கிறிஸ்துவின் திருச்சபையானது நமது திருச்சபையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. கிறிஸ்துவின் உண்மையான திருச்சபை, இறையரசின் ஓர் ஊழியன் மாத்திரமே. இறையரசு கிறிஸ்தவ வெளிப்பாட்டின்படி இறைவனுல் தரப்பட்ட மீட்பின் ஒரு வடிவமே. எனவே உண்மைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஏற்ப நமது தெரிவுகளும் பிரமாணிக்கமும் அமைய வேண்டும். இறையரசுக்கு மேலாக இறைவனும், திருச்சபைக்கு மேலாக இறை அரசும் முதலிடம் பெறவேண்டும். இவ்வாறே முறைப்படி அமைகின்றது. வருங்காலத்தில் இடம்பெறப் போகும் எந்த ஆவியியலும், பரிசுத்த ஆவியின் செயற்பாட்டை இருவித மீட்பு முறையில் அல்லது வரலாற்றில் கண்டுகொள்ள வேண்டும். ஒன்று பிரபஞ்சம் சார்ந்தது அல்லது பொதுவானது. மற்றையது தனிப்பட்டது, கிறிஸ்தவத்திற்குரியது. இவ்விரு வரலாறுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாகவோ, எதிர்மாறுனவையாகவோ இராமல், தம் இயல்பிலே ஒன்றுடன் மற்றென்று தொடர்பு கொண்டதாக, ஒன்றையொன்று நிறைவு செய்வதாக இருக்கின்றது.

## 25. வேதாகமத்தில் மீண்டும் கண்டுணரப்படுகின்ற ஆவி (The Spirit rediscovered in Scriptures):

உண்மைகள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான நோக்கத்தோடு உரையாடுவதற்கு, ஒரு பரந்த ஒருங்கிணைகின்ற சக்தி தேவைப்படுகின்றது. இதனை ஆவியானவர் மாத்திரமே அளிக்க முடியும். அதிர்ஷ்டவசமாக, ஒருங்கிணைந்த ஓர் இணக்கத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவர் பற்றிக் கற்றுக்கொள்ள ஒரு புதிய அணுகுமுறை உருவாகியுள்ளது. ஆவியின் மீட்புச் செயற்பாட்டை பிரபஞ்சத்திலும், மனித வரலாற்றிலும் பகுத்தாராய்கையில் அவரைப் படைப்பவராக (Creator), படைப்பைப் புதுப்பிப்பவராக (Recreator), படைப்பைக் கடந்தவராக (Transcreator) இவ்வணுகுமுறை காண்கிறது (Fashioner, Refashianer and Transfashioner).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியானவருடைய செயற்பாட்டின் இம் மூவித வடிவங்கள் ஏற்கனவே பழைய ஏற்பாட்டு யூத மறையில் காணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் யாவேயின் பலம் ஆவியின் மூலமாக நீதிபதிகளுக்கு உறுதியளித்தது ; அரசர்களை அபிஷேகம் செய்தது ; இறைவாக்கினர்களுக்கு ஏவுதல்களைக் கொடுத்தது. இதன் வழியாக இறைவன் மனுக்குலத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கையை (creation) இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் ஒரு நிறைவுக்குக் கொண்டுவந்தது (Recreation). மீட்பின் திட்டவட்டமான நிறைவு எதிர்வரும் மெசியாவின் காலத்திலேதான் படிப்படியாக வெளிப்படுத்தப்படும் என்பதனால் யூத மறையில் ஆவியானவர் இறுதிக்காலச் செயற்பாட்டையும் தமதாக்கிக் கொள்கிறார். இஸ்ராயேலை இறுதி வரலாற்றில் புதுப்பிப்பதற்காக (Transcreation) ஆவியானவர் அபரிமிதமாகப் பொழியப்படுவார் என இறைவாக்குகள் பல முன்கூட்டியே அறிவிக்கின்றன.

எனவே, யூத ஆவியியலில் யாவேயின் ஆவியானவருடைய உண்மையான பிரசன்னமும் (ontological presence) செயற்பாடும் ஒருங்கிணைந்த இம்மூன்று எல்லைகளுக்குள் ஆராயப்படுகின்றன. இங்கு ஆவியானவர் படைப்பின் காரண கர்த்தாவாகச் செயலாற்றுகின்றார். இப்படைப்புச் செயல் முதலாவதாக அனைத்து மறைகளையும், கலாச்சாரங்களையும் சிறப்பாக யூத மறையையும் தன்னகத்தே கொண்டது. இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டிலும், திருச்சபை வாழ்விலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளதுபோல கிறிஸ்து — நிகழ்ச்சியின் ஆரம்பம், அதன் வெற்றி, தொடர்ச்சி அனைத்தையும் இணைத்துக் கொள்கிறது. மூன்றாவதாக இப்பரந்த உலகின்கண் ஆவியின் செயற்பாடுகளையும், உள்ளடக்குகிறது அதாவது, அனைத்தும் நிறைவேறுமளவும் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் வாழ்ந்து, அன்பில் சேவைசெய்து, நம்பிக்கையில் காத்திருக்கின்ற அலுவலில் ஆவியானவர் செயற்படுகின்றார்.

படைப்பவர் என்ற முறையில் கிறிஸ்து — நிகழ்ச்சியின் முன்னரே — பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளின் முன்னாலேயே ஆவியானவர் அனைத்து மக்களினதும், கலாச்சாரங்களினதும், மறைகளினதும் காரண கர்த்தாவாகவும், அவைகளை ஆரம்பித்தவராகவும் இருக்கின்றார் மக்கட்பண்பில் உள்ளார்ந்த வகையில் வாழுகின்ற ஆவியைப் பற்றிய கருத்தானது கூடிய ஒற்றுமையையும், விளக்கத்தையும் தேட மக்களுக்குத் துணைபுரிகின்றது. பழங்குடி இனங்களின் சமயங்கள் கூட உலகத்தைப்பற்றியோ, மக்கட் சமுதாயத்தைப் பற்றியோ அக்கறையற்றவராக ஆவியைக் கருதுவதில்லை. எந்த மறையைப் பின்பற்றுபவனும் தனது மானிட முயற்சிகள் அனைத்திலும் — அதாவது ஓவியம், சட்டம், அரசியல், ஒழுக்கவியல் போன்றவற்றில் ஆவியானவரைக் கண்டுகொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் உள்ளுணர்வை இயல்பாகவே பெறுகின்றான். அவனிலிருந்து அவனை வெளியே இழுக்கின்ற இந்த ஆவியானவர் அவனிடம் செயலாற்றுவிட்டால், தனக்குள்ளே சிறைப்பட்ட ஒரு கைதியாகத்தான் அவன் இருப்பான். மாறாக அவனில் வாழுகின்ற ஆவியின் துணையுடன், அவன் தான் என்ற எல்லைக்கு அப்பால் தனது கலாச்சாரம் இனம் என்ற எல்லைகளுக்கப்பால் சென்று, தான் ஒரு மானிட சமூகத்தின் பிரசை என்பதை உணர்கின்றான்; சமாதானம் சுதந்திரம் என்பவற்றுக்காக உழைப்பதில் எவ்வித பாகுபாடுமின்றி, அனைவருடனும் ஒத்துழைக்கின்றான். இவ்வாறு யாவேயின் ஆவியானவர் இஸ்ராயேலரது மீட்பில், காணக்கூடிய காரண கர்த்தாவாகவும் விளங்குகின்றார்.

வாழ்வின் மறைமுகமான காரண கர்த்தாவாக இருந்துகொண்டு மக்களின் அரசியல், உலகியல் நலன்களில் செல்வாக்குச் செலுத்துகின்றார். விடுதலையளிக்கும் தனது செயற்பாட்டை வாழ்வும், புனிதத்துவமும் இணைந்ததொன்றாக மாற்றுகின்றார்.

இவ்வாறு திருமறைகள், இறைவாக்கினர் மூலமாகவும், கலாச்சாரங்கள் கோட்பாடுகள் மூலமாகவும், ஆவியானவர் படைக்கும் பிதாவின் இடமாக (Spiritus Patris) பேசுகின்றார் அதேவேளையில் வரலாற்றில் படைப்பைப் புதுப்பிப்பவரான மைந்தனின் பணிக்கும், அவரது மகிமைக்கும் துணைபுரிகின்றார் (Spiritus Christi). தொடர்ந்து திருச்சபையின் வழிபாடு, அதன் திருவருட்சாதனங்கள், சமுதாயத்தின் மத்தியில் அதன் பயணம் என்பவற்றில் ஊக்கம் அளிக்கின்றார் — இவையனைத்தும் இறையரசில் நித்தியமாய் பங்கெடுப்பதாகிய இறுதி இலக்கையே நோக்காகக் கொண்டிருக்கின்றன (Spiritus Redemptor).

**26. திருச்சபை சார்ந்த ஆவியியலிலிருந்து ஒருங்கிணைந்த ஆவியியலுக்கு (From ecclesial Pneumatoloy to integral pneumatology):**

மேற்கூறப்பட்ட காரணத்திற்காக வேதாகமம், திருச்சபைத் தந்தையரின் படிப்பினைகள், விசுவாச சத்தியங்கள் சார்ந்த தரவுகளைப் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றும் முறையைக் கைவிட்டு, இன்றைய உலகினை வெளிப்படுத்தும் அடையாளங்கள், சவால்களாக எழுகின்ற பிரச்சனைகளையும், உண்மைகளையும் ஒருங்கிணைத்த ஒரு பாரம்பரிய வேதாகமத் தரவை நாம் தேடுகின்றோம். ஒருங்கிணைந்த ஆவியியலுக்கான இத்தகைய முயற்சி படைப்பவர், படைப்பைப் புதுப்பிப்பவர், படைப்பைக் கடந்தவராகிய ஆவியானவரின் திட்டமேயாகும். இத்தகைய ஆவியியல், பல்வேறு மெய்மைகளில் காணப்படும் ஆவியின் வெளிப்பாடுகளுடன் உரையாடல் நிகழ்த்தும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. வார்த்தை–கிறீஸ்து இயலிலிருந்து ஆவி–கிறீஸ்து இயலுக்கு (From-Word Christology to Spirit-Christology) :

புதிய ஏற்பாட்டிலிருந்து முதன்மையான மாதிரி ஒன்றைக் கண்டுபிடிக்க இறையியலாளர் பலரும் ஆரம்பித்திருக்கின்றனர்கள். இதில் இயேசுக்கிறிஸ்துவின் இருப்பும், பணியும் ஆவியால் இயக்கப்படுவனவாக, ஆவிக்குரிய தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இயேசுக்கிறிஸ்துவின் இயல்பும், செயற்பாடும் ஆவி-கிறீஸ்து இயலினால் விளக்கப்படுகின்றன.

மேற்கத்திய நாடுகளில் நிலவும் வார்த்தை–கிறீஸ்து இயலின் செல்வாக்கை சமப்படுத்துவதற்காகப் பலர் நசரேத்தூர் இயேசுவை ஆவியால் இயக்கப்படும் ஒருவராக, அனைத்துலகுக்குமே உரிய ஒருவராகக் காணத் தொடங்கியுள்ளனர். இந்த அணுகுமுறை சமநோக்கு நற்செய்திகளினதும் அருளப்பர் நற்செய்தியினதும் பாரம்பரியங்களைப் பிரமாணிக்கமாக ஏற்றுக்கொள்ளுகிறது. இயேசுவின் மானிடத்தன்மையான வளர்ச்சியை—அவர் அவராக மாறிக் கொண்டு வந்த வளர்ச்சியை—தெய்வீகத் தன்மையில் அல்ல மானிடத்தன்மையில் வந்த படிமுறை வளர்ச்சியை இவ்வணுகுமுறை எடுத்துக் காட்டுகின்றது. இவை யாவும் ஆவியானவரின் செயற்பாடுகள்.

இயேசுவுக்கும் மீட்பைக் கொணரும் ஏனையோருக்குமிடையில் இருக்கின்ற அடிப்படையான வேறுபாட்டை வார்த்தை - கிறீஸ்து இயல் அழுத்திக் கூறுகின்றது. இதனால் யேசுவின் மனிதத் தன்மை மட்டில் ஆவியானவரின் புனிதப்படுத்தும் செயற்பாட்டை மேலோட்டமாக நோக்குகின்றது.

இயேசுக்கிறீதுவில் படைப்பைப் புதுப்பிக்கும் யாவேயின் திட்டம் ஒரு முறையிலேயே மனுக்குலத்தை வந்தடைகிறது. இக்கொடையை இயேசுவின் மனிதத்தன்மை அனைவருடைய பெயராலும் ஏற்றுக் கொள்கிறது.

ஆகவே, யாவே கொடுப்பவராகவும், வார்த்தையாகவும், கொடையாகவும் இருக்க, ஆவியானவர் கொடுக்கும் செயலாக இருக்கின்றார். யாவே தனது வார்த்தையை ஆவியியல் மனுக்குலத்திற்கு வழங்க மனுக்குலம் அந்த வார்த்தையை ஆவியியலில் ஏற்றுக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. ஆவி – கிறீஸ்து இயலின் முன்னோக்கிய உந்துகை (Forward Thrust of the Spirit-Christology):**

கிறீஸ்து – நிகழ்ச்சியின் பின்னர், உலக முடிவு வரை ஆவியான வர் திருச்சபையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால், பரம்பரை ஆவியியல், இறுதிக்கால செயற்பாடுகளுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே, கிறீஸ்து இயலில் ஆவியியல் சார்ந்த தன்மை யானது, வருங்காலத் திருச்சபையியலில் ஓர் உறுதியான செல்வாக் கைச் செலு தும் என்பது நிச்சயம். மேற்கத்திய நாடுகளில் கிறீஸ்து ஒருவர் மட்டும்தான் (Christo–monism) என்னும் கொள்கை நிலவுகின் றது. இக் கொள்கையை மேற்கொள்ள வேண்டும். திருச்சபையியலும், ஆவியியலும் கிறீஸ்து இயலை விளக்குவதற்காக மட்டுமே இருக்கின்றன எனக் கொள்ளக்கூடாது. இந்நிலையில் இறுதிக்காலத்தை நோக்கிச் செல்லுகின்ற ஆவியியல் தான் எமக்குத் தேவை (Eschatologically oriented pneumatology).

பெந்தக்கோஸ்தின் பின் படைப்பைக் கடந்தவராகிய ஆவியா னவர் படைத்தவரின் பணியையும், படைப்பைப் புதுப்பித்தவரின் பணி யையும் தொடர்ந்து ஆற்றுகிறார்; ஆரம்பத்திலிருந்த நிலையுடன் (தந்தை மைந்தன் ஆவி) இறுதிக்கால நிலையொன்றினையும் (ஆவி மைந் தன் தந்தை) இணைத்து விடுகின்றார்.

எனவே, பரிசுத்த ஆவியானவர் ஆரம்ப நிலைச் செயற்பாட்டை உச்ச நிலைக்குக் கொண்டு வருபவராகவும் (culminator of originative movement) இறுதிக்காலத்தை நோக்கிய செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பவராகவும் (initiator of eschatological movement) இருந்து, வரலாற்றின் மையமான தனது பங்கை ஆற்றி வருகின்றார்.

**ஆய்வுப்பொருள் 5** ஆவியைப் பகுத்துணர்கின்ற பழைய வழிகள், முறைகளிலிருந்து திருச்சபைகளையும், அவற்றின் தலைவர் களையும் விடுவிக்கவும், புதிய பிரமாணங்களையும், முறை களையும் செயற்படுத்தவும், ஆவியானவர் எங்கு எப் பொழுது செயலாற்றுகின்றாரோ, அங்கு அப்பொழுது மிகப்பயன்தரக் கூடிய முறையில் ஒத்துழைக்கவும் உதவக் கூடிய பகுத்துணரும் ஒரு புதிய ஆவியியல் இன்றைய கால கட்டத்தில் அவசியம் தேவைப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. பகுத்துணர வேண்டியதன் தேவை அதிகரிக்கின்றது (Increasing need of discernment) :

ஜெருசலேம், அந்தியோக் திருச்சபைகளிலும், மிகத் தெளிவாக சின்னப்பரின் திருச்சபைகளிலும் கிறீஸ்தவர்களில், கிறீஸ்தவர்கள் மூலம் இடம் பெற்ற ஆவியின் செயற்பாடுகள் ஏராளம். அவற்றின் செல்வாக்கும் அதிகம். அக் குழுக்கள் பல்வேறு ஆற்றல்கள், இறைவாக்குகள், அருங்கொடைகளைக் கொண்டிருந்தன. தாம் இருந்த இடத்திற்குப் பொருந்தக்கூடிய பல்வேறு சேவைகளையும் ஏற்றுக் கொண்ட ஆவி சார்ந்த குழுக்களாக விளங்கின. அக்குழுக்களின் நிறுவனத்தன்மை மிகக் குறைவாகவே காணப்பட்டது. தலைவர்கள் அவர்களது ஆற்றலின் வளத்தைக் கண்டு, அவர்களை ஊக்குவித்தார்கள்; மேன்மேலும் கொடைகளைப் பெற செபித்தார்கள். கொடைகளும், சேவைகளும் அதிகரிக்கவே அவர்கள் தம்மைத் தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள். (அப். பணி 6:1–6; 13:1–5) ஆனால், இது பிற்காலத்திய திருச்சபைகளின் மிதமிஞ்சிய உற்சாகமாகவே காணப்பட்டது (Enthusiasts) இம் மிதமிஞ்சிய உற்சாகம் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் தலையெடுத்ததனால் அருங்கொடைகளைப் படிப்படியாக ஒழுங்கு படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

மிதமிஞ்சிய ஆர்வம் கொண்ட அருங்கொடைகளைப் பகுத்துணர்ந்து ஒழுங்குபடுத்தும் நல்லெண்ணத்துடன் கையாளப்பட்ட ஆவி சார்ந்த செயல் முறையானது, துரதிஷ்டவசமாக வரலாற்றில் கடினமாக்கப்பட்டு, கட்டம் சார்ந்த கட்டுக் கோப்புகளாகவும் ஏன் (முற்றாக அடக்கி வைக்காவிட்டாலும்) சந்தேகத்திற்கும், கண்டனத்திற்கும் உரிய கட்டுப்பாடுகளாகவும் மாறிவிட்டன. பெறுமதி வாய்ந்த அருங்கொடைகளைப் பகுத்துணரும் பணியானது படிப்படியாக திருநிலைப்படுத்தப்பட்ட உரிமையாகவும் சலுகையாகவும் மாறின. திருச்சபையின் தலைமைத்துவம் திருநிலைப்படுத்தலின் புனிதமான அதிகாரத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு, ஆவிசார்ந்த முயற்சிகளின் மேல் தனது கடினமான சட்டங்களையும் பிரயோகிக்கின்றது. இதனால், திருச்சபையின் ஆவி சார்ந்த நல் வளங்களைத் தூண்டிவிட்டு/வளர்த்து மாற்றங்களைக் கொண்டுவரத் துணைபுரிவதற்குப் பதிலாக (prophetic stimulator/promotor/or catalyst of the good chrismatic resources) தீய ஆவியைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வு, கட்டுப்பாடு என்பவற்றையே கைக்கொள்ளப் பார்க்கிறது. எனவே, இரண்டாம் வத்திக்கான் சங்கம் மீண்டும் மீண்டும் தரும் எச்சரிக்கை; ''தேவ ஆவியை அடக்கி ஒடுக்க வேண்டாம்'' (தி. 12 இ, பொ. 3 இ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. நல்லது காணும் பகுத்துணர்தல் தேவை (optimistic discernment needed) :**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினல் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையியல் சார்ந்த புரட்சியினல் திருச்சபை அமைப்பில் ஆவியானவர் செயலாற்றுவதைக் காணக்கூடுமாயிருக்கின்றது. இது அருங்கொடை சார்ந்த ஒரு புரட்சி. இது சித்திபெற ஆவியினல் புதிப்பிக்கப்பட்ட அமைப்புகளும் ஆட்களும் தேவை. 'தேவ ஆவியைக் கட்டுப்படுத்த வேண்டாம்' என்னும் எச்சரிக்கை தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. திருச்சபைகளின் ஆட்சிப்பீடம் விழிப்பாக, உண்மைத்தன்மையுடையதாக விளங்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றது; சட்டத்தை மீறுகிறவர்களையும், மிதமிஞ்சிய உற்சாகம் ஆர்வம் கொண்டவர்களையும் கண்டு பிடிப்பதற்காக அல்ல, மாறுக, நாம் எதிர்பாராத கோணங்களிலிருந்து எழுகின்ற அருங்கொடை சார்ந்த அடையாளங்களை/ ஆட்களை வரவேற்கவும் (கீழ் மட்டத்திலிருந்து), சந்தேகமின்றி அவர்களை உற்சாகப்படுத்தவும், நம்மிடமிருப்பதை இழக்கவோ ஆபத்தை எதிர்கொள்ளவோ பயப்படாது அவர்களுக்குத் துணைபுரியவும், உறுதியுடனும் நல்லது காணும் தன்மையுடனும் அவர்களை உலகினுள் இட்டுச் செல்லவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இது இறைவனின் வேலை; வழிநடத்துபவர் அவரது ஆவியே. திருநிலைப்படுத்தப்பட்ட குரு, பகுத்துணரும் ஒரு கருவியே — அவர் தாமே அந்த உய்த்துணர்தலின் உருவமாக மாறிவிடலாகாது!

அருங்கொடைத் திறம் பெற்ற சிலரைத் திருச்சபைத் தலைவர்களாக திருநிலைப்படுத்துவதன் அடிப்படைக் காரணம் அவர்களது தலைமைத்துவப் பதவிக்கு உரிய திறமையையும், ஆற்றலையும் அறிந்து இறைவன் அவர்களை ஆசீர்வதித்துள்ளார் என்னும் நம்பிக்கையாகும். அதாவது ஒரு சிறப்பான உணர்வினல் அல்லது இயற்கைக்குணத்தினல் அவர்கள் ஆவியின் கொடைகளைக் கண்டுபிடித்து, வளர்க்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிருர்கள் என்னும் நம்பிக்கையாகும் (1 அரு. 5:30). சாத்தானின் வேலைகளிலிருந்து, பரிசுத்த ஆவியின் வேலைகளை இனங்கண்டு பிரித்தறியும் ஆற்றலை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் சாத்தானும் ஒளியின் தூதன் போல வேடங்கொண்டு மக்கள் மத்தியில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிருன் (1 கொரி. 12 : 10; 2 கொரி. 11 : '4) இதனுல்தான் "அன்புக்குரியவர்களே, தேவ ஆவியின் ஏவுதல் தமக்கிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எல்லாரையுமே நம்பி விடாதீர்கள். அந்தஏவுதல் கடவுளிடம் இருந்துதான் வருகிறதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சோதித்து அறியுங்கள் (1 அரு. 4:1) எனும் எச்சரிக்கை ஒலிக்கின்றது. ஆவியைப் பரிசோதித்து அறிவது அவசியம். ஆனால், சந்தேகக் கண்ணோட்டத்துடன் ஆரம்பத்திலே அடக்கிவிடாது (முளையிலே கிள்ளி விடாது) நல்லதைக் காணும் பண்புடன் அணுகவேண்டும். ''நம்மோடு இல்லாதவன் நமக்கு எதிராக இருக்கிறான்'' என்று சொல்வதற்குப் பதிலாக ''நமக்கு எதிராக இராதவன் நம்மோடு இருக்கிறான் என நம்பலாம்'' என்று கூறிக்கொள்வோம். பகுத்துணரும் ஆற்றல் திருநிலைப்படுத்தப்படுவதால் இயல்பாகக் கிடைத்துவிடும் ஒன்றல்ல. மாறாக, இடையறாது செபித்து, அதனை வளர்த்து வரவேண்டும். ஆவியைப்பற்றிய விடயங்களில் தலைவர்களாக இருக்க முடியாவிட்டாலும், பகுத்துணருவதற்கும், கொடைகளும் அடையாளங்களும் மலர்வதற்கும் தேவையான சூழ்நிலையை அல்லது சுதந்திரத்தை உருவாக்கிக் கொடுக்கலாம்.

அருங்கொடைகள் ஆவியின் கொடைகள்; மனிதருடையவோ அன்றேல் திருநிலைப்படுத்தப்பட்டோருடையவையோ அல்ல. திருநிலைப்படுத்தல் அருங்கொடைகளை வழங்குவதில்லை. மாறாக அவைகளை உறுதி செய்து, பலப்படுத்தி, ஏற்றுக்கொள்கின்றன. பகுத்துணரும் கொடையானது ஒரு முறையிலேயே பெற்றுவிடக்கூடிய ஒன்றல்ல. நடைமுறையில் இடையறாது வளர்க்கப்பட்டு, செயலாக்கம் பெற வேண்டும்.

## 31. பகுத்துணர்தலுக்கான ஆன்மீக முதிர்ச்சி (Spiritual Maturity for Discernment) :

அருங்கொடைகள் பலவற்றுள் பகுத்துணர்தலுக்கான ஆற்றலும் ஒன்று என்பதைப் புனித சின்னப்பர் கண்டுகொள்கிறார் (1 கொரி. 12;10). மிகஅபூர்வமாகக் கிடைக்கின்ற ஓர் உரிமையாகச் சின்னப்பர் இதனைக் கருதுவதில்லை. மாறாக, இதனைப் பிரயோகிப்பவரின் ஆன்மீக முதிர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கூர்மையான அகக்காட்சி, தீர்மானம்; உற்சாகம் என்பவற்றின் பயிற்சிதான் இந்த ஆற்றல்.

பகுத்துணர்தலின் நோக்கம் அன்பைவளர்த்தல் - ''உங்கள் அன்பு மேன்மேலும் வளர்ந்து மேலானவற்றையே பகுத்தறியச் செய்யும் அறிவையும், உள்ளுணர்வு அனைத்தையும் உங்களுக்குத்தர வேண்டும்'' (பிலிப். 1;9-10).

நல்ல ஆவியைப் பகுத்துணர்வதற்கான இந்த ஆன்மீக முதிர்ச்சி என்ன? இது முக்கியமாக இறைவனில் இறைவனைப்பற்றிய ஓர் உணர்வைக் (non-objectivated consciousness) (ஞானம்) கொண்டுள்ளது. இறைவெளிப்பாடுகள், இறையியல், திருச்சபைச் சட்டங்கள் யாவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பற்றிய அறிவைவிட இறைவனைப்பற்றிய ஓர் உணர்வும், இறைவனுக்கான ஓர் உணர்வுமே (A sense of God and an instinict for God) பகுத்துணர்தலுக்கு அவசியமான அத்திவாரமாகும். ஆரம்பத்தில் பந்தியில் பணிவிடை செய்வதற்கென அப்போஸ்தலர்களால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட ''நன்மதிப்புள்ளவர்களாகவும், தேவ ஆவியும் ஞானமும் நிரம்பப் பெற்றவர்களாகவும்'' (அப். பணி. 6;2-3) இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டார்கள். அப்படியானால் நமது சமூகங்களை வழிநடத்தும் திருநிலைப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்திடம் இன்னும் எவ்வளவு அதிகம் எதிர்பார்க்கப்படும்? இறைவனுக்கான, அவரது செயல்களுக்கான, உணர்வு கொண்ட ஆற்றல் சாதாரண கிறீஸ்தவர்களில் முதலாகக் காணப்படவேண்டும். (இவர்கள் இறையியல் அறிவு அற்றவர்கள், திருநிலைப்படுத்தப்படாதவர்கள்). ஆயினும், இறைவனைச் சார்ந்த புண்ணியங்களான விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவற்றை அனுசரிக்கிறார்கள். இறைவனின் இருப்பிலும், நன்மைத்தனத்திலும் உறுதியான விசுவாசம் கொள்ளுகிறார்கள். அனைவர் மட்டிலும் சுயநலமற்ற அன்பைச் செலுத்துகிறார்கள். இவையனைத்தும் தெய்வீக ஞானத்தையும், உணர்வையும் அவர்களில் உருவாக்குகின்றது. இத்தகைய உணர்வுநிலைதான் இவ்வருங்கொடையைப் புறப்பொருளாக்குதல் (objectification) அல்லது ஆளுருவாக்கல் (personification) என்னும் எல்லைகளுக்கப்பால் செல்ல, எங்கு எப்பொழுது தெய்வீக பிரசன்னமும் செயற்பாடும் இடம் பெறுகின்றனவோ அங்கு அதனைக் கண்டு புலன்களால் அல்லது மனதால் உணர்ந்து கொள்ளத் துணைபுரிகின்றது. (இன்றைய இளைஞர் தமது சூழலுக்கு வெளியே உள்ள இடங்களில் திருவருட்சாதனத்தை நோக்கியதான அல்லது நிறுவனத்தன்மை கொண்டதான மறைகளை விடுத்து, மறைசாராத கிறீஸ்தவத்தை (religionless Christianity) அல்லது இவ்வுலகத் தன்மைகடந்த தியானங்களை (transcendental meditations) நாடிச் செல்கின்றனர். (மேற்கூறிய இறையனுபவத்திற்காக இவர்கள் தவிக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது). ஆயினும் நம்மில் பலர் இறையுணர்வில்லாமலேயே திருச்சபையில் தலைமைப்பதவிகளை வகிக்க முயற்சிக்கிறோம். இந்த இறையுணர்வு இறையனுபவத்தால் மட்டுமே கைகூடுவது; இறையியலினால் அல்ல, இறை பயிற்சியினால் கிடைப்பது (theo-praxis not theo-logy)

32. புலனுக்குட்படாத ஆவியியல்
(Non-objectified pneumatology) :

கிறீஸ்தவ தலைவர்களின் பகுத்துணரும் காட்சியைத் தெளிவாக்க உதவக்கூடியதான ஆவியியலை, நமது இறையியல் கருத்துக்கள் தருகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையியல் சார்ந்த ஆவியியலுக்குள் எல்லைப்படுத்திவிடக்கூடாது. மாறாக, திருமறைகள்/கலாச்சாரங்கள்/இலட்சியங்கள், சமூக-பொருளாதார அரசியல் வாழ்வு போன்ற பல்வேறு மெய்மைகளில் பிரசன்னமாக இருக்கும் ஆவியின் புலனுக்குட்படாத அல்லது ஆளுருவாக்கப் படாத தன்மையை போதிய அளவு வளர்க்க வேண்டும். அன்றேல் நமது திருச்சபைகளின் எல்லைகளுக்கப்பால் அறியாமை உணர்வற்ற தன்மை என்பது நிச்சயம் காணப்படும். திருச்சபைக்கு அப்பால் இந்த மெய்மைகளில் செயலாற்றும் ஆண்டவனின் ஆவியானவரை அடையாளம் கண்டு கொண்டாலன்றி, நமது திருச்சபைகளுக்குப் புறம்பே பகுத்துணர்தல் இடம் பெற முடியாது.

மேலும் கிறீஸ்துவை அல்லது திருச்சபையை அல்லது திருவட்சாதனங்களை மையமாகக் கொண்ட, புலனுக்குட்பட்ட அல்லது ஆளுருவாக்கப்பட்ட ஆவியியலானது திருவருட் சாதன/திருச்சபை அல்லது கிறீஸ்தவ அமைப்புகளுக்கு அப்பால் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும், செயற்பாட்டையும் பற்றிய உண்மையைப் பகுத்துணரவோ, கண்டுகொள்ளவோ இயலுமான ஆற்றலைப் போதிய அளவு கொண்டிருக்க மாட்டாது. திருச்சபைக்கு அப்பால் ஆவியின் செயற்பாடுகளைப் பகுத்துணரும் ஆற்றலை நாம் வளர்க்கும் போது, கிறீஸ்தவ செவிப்படுத்தலுக்குள் இருக்கும் நமக்கு, காணக்கூடிய முறையில் திருச்சபை அளிக்கும் சாதனங்களின் உண்மைத் தன்மையோ, இன்றியமையாத தன்மையோ நாம் குறைவாக மதிப்பிடுவதில்லை, சந்தேகப்படுவதில்லை. கிறீஸ்தவ வெளிப்படுத்தலுக்கு செவிமடுத்து கிறீஸ்துவை, அவரது திருச்சபையை, அவரது திருவருட்சாதனங்களை புனிதத்துவத்தினதும் மீட்பினதும் சாதாரண சாதனங்களாக ஏற்றுக்கொண்ட நாம் அவைகளைக் கிறீஸ்தவ வாழ்வுக்கெனப் பயன்படுத்த நமது விசுவாசத்தினால் கடமைப்பட்டுள்ளோம். மேலான இறையனுபவத்தைப் பெறும் படியாக, திருச்சபையில் நமது பாரம்பரிய வழிபாட்டு முறைகளை, திருவருட்சாதனங்களை வார்த்தைமுறைகளைப் புதுப்பிக்க வேண்டும். (inculturation) அவ்வாறு செய்யும் போது இறைவனின் பிரசன்னத்தையும், செயல்களையும் ஒரு குறுகிய எல்லைக்குட்படுத்தல் கூடாது. அதாவது, நமது மந்தைக்கு வெளியே ஏனையோரில் செயலாற்றுகின்ற மீட்பளிக்கும் ஆவியை — புனிதப்படுத்தும் ஆவியை நிராகரித்தல் கூடாது. ஆவியானவர் தாம் விரும்பிய பொழுது, விரும்பிய இடத்தில் அசைவாடுகின்றார். நமது அகக் காட்சியையும், பகுத்துணர்தலையும் வளர்த்து நாம் கனவிலும் கருதமுடியாத அவரது உலகின் மூலை முடுக்குகளிலே அவரது செயல்களைக்கண்டு, அவரைப் பின் செல்வது நமது கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஷ்ரவசமாக, கடந்த காலங்களில் நமது திருச்சபைகளிலே ஆவியைப்பற்றிய உணர்வும், அக்காட்சியும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை அல்லது போதிய அளவு வளர்க்கப்படவில்லை. நமது தலைவர்களின் மெய்யியல், இறையியல் விஞ்ஞானங்கள் இத்தேவையை நிறைவேற்றுவதை நோக்காகக்கொள்ளவேண்டும். இன்றைய உலகம் விடுக்கும் சவால்களை முன்வைத்தும் நமது திருச்சபைகளில் அருங்கொடை சார்ந்த வளங்கள் பல எழுகின்ற காரணத்தினாலும் இத்தேவை மிகவும் அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது.

பரிசுத்த ஆவியே எழுந்தருளி வாரும்,
உம்மைப்பற்றிய எமது காட்சியையும்,
அனுபவத்தையும் புதுப்பித்தருளும்.
நீர் வாழுமிடங்களில்
நீர் ஆற்றும் செயல்களில்
உம்மைக்கண்டு கொள்ளாதவாறு
நான் குருடாகி விடாமல்
உம்மை மேன் மேலும் கண்டு கொள்ள
அருள் தாரும்.

---

"இறையரசு கிறீஸ்துவின் நற்செய்தி எமது வாழ்வின் பின் வரவிருக்கும் சாவு, தீர்ப்பு, மகிழ்ச்சி சமாதானம் போன்றவற்றிற்கு எமது வாழ்விலேயே அர்த்தத்தைக் கொடுக்கின்றது."

**Schnackenburg**

"மனிதரிடையே உள்ள கட்புலனாகின்ற, தொட்டுணரத்தக்க உறவுகளின் மீளமைப்பே இறைராட்சியமாகும். மனித வாழ்வின் ஒவ்வொரு படிநிலையிலும் உண்டாகும் உண்மை விடுதலையிலேயே இது உணரப்படும்."

**Jan Sobrino**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியும் இறையரசும்

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

**வ**றைந்தர வரட்சியில் விளைந்த தாகத்தைத் தாங்கமுடியாத கலைமான் நீர்த்தடாகங்களுக்காகத் தவிப்பதுபோன்று மனித உள்ளங்கள் அமைதிக்காக ஏங்குகின்றன. யுத்த எதிரொலிகள், அரசியல் குழப்பங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், பிரிவினைகள் பலரின் அடிமனதில் விரக்தி உணர்வுகளைப் பிரசவித்துக்கொண்டிருக்கின்றன. சமாதான உடன்படிக்கையின் தீர்வுகள், வாக்குறுதிகள் இவற்றின் மத்திலும் சமாதானம் ஒரு கானல் நீராகவே தென்படுகின்றது.

சமாதானம். அது என்ன? ''அமைதி என்பது போரின்மை மட்டுமல்ல, எதிரிகளின் ஆற்றல்களைச் சமநிலைக்குக் கொண்டுவருவதிலும் அது அடங்குவதில்லை. மாறாக நீதியின் செயல் (இசை. 32:7) எனத் தகுந்த முறையில் அழைக்கப்படுகின்றது'' என விபரிக்கின்றது 2ஆம் வத். சங்க ஏடு. (இ. உ. தி. 78)

## இறைவார்த்தையின் ஒளியில்

**ஆரம்ப வரலாற்றில்:** சமாதானம் எபிரேய மொழியில் [SĀLÔM] 'சலோம்' என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஒரு பதத்தை ஆழ்ந்து சிந்தித்தால் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள் நமக்குப் புலப்படும். எபிரேய மொழியில் சமாதானம் என்பது நிறைவான சுபீட்சமான வாழ்வு என்று குறித்து நின்றாலும், பழைய ஏற்பாட்டில் மக்கள் வாழ்வில் பல பொருள்பட இசைந்து கொடுப்பதையும் காணலாம். பொதுவாகக் கூறின் உடல், உளம் சார்ந்த குழப்பங்களிலிருந்து விடுதலையும், இரம்மியமான அமைதியையும் கொண்ட வாழ்வாக அமைவதே. இவ்வாழ்வு மலர வாழ்த்துதல் கூறுவதுண்டு. ''ஆண்டவர் உன் பக்கம் தம் திருமுகத்தைத் திருப்பி உனக்குச் சமாதானம் அருள்வாராக.'' (எண். 6:26) ''இந்நாட்டு அரசர் அனைவரும் சாலமோன் மன்னருக்கு அடிபணிந்து வந்தனர். சுற்றுப்புறமெங்கிலும் சமாதானம் நிலவிற்று.'' (1அர. 4:24) மக்கள் இப்படிப்பட்ட அமைதியை ஆண்டவரின் அருங்கொடை என்றே கருதினர். ''**நாம்** உங்கள் எல்லைகளில் சமாதானத்தைத் தந்தருள்வோம்.'' (லேவி. 26:6) இதனால், சமாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தைச் சுவைப்போர் இறைவனுடன் அன்புறவில் ஒன்றித்திருக்கிறார்கள் எனவும் கருதப்பட்டார்கள். "தீமையை விலக்கு, நன்மையைச் செய். அப்பொழுது என்றென்றும் வாழ்வாய்." (சங். 36:27) லேவியராகமத்தில் அமைதியின் பலதரப்பட்ட நிலைப்பாடுகள் மக்களின் வாழ்க்கைப் பின்னணியோடு இணைத்து வர்ணிக்கப்பட்டுள்ளன. பருவ மழை, நிலத்தின் அமோக விளைச்சல், விலங்குகளினதும், பகைவர்களினதும் அச்சுறுத்தல்கள் இல்லாமை, மக்கட்பேறு, இறைவனது உறைவிடம் மக்கள் மத்தியில் இவைபோன்ற அறிகுறிகள் அமைதியின் பல வடிவ அனுபவமாயின.

**இறைவாக்கினர் பார்வையில்:** இவர்கள் பார்வையில் அமைதியின் வடிவம் வேறுபட்ட உருவம் பெறுகின்றது. சமாதானம் என்பது வெறும் நீர் நில வளமும், அரசியல் சமூக அரண் பொருந்திய சுபீட்ச வாழ்வும் மட்டுமல்ல, மாறாக உண்மையிலும், நீதியிலும் கனிவதே நீடித்த அமைதி என்கிறார்கள் இறைவாக்கினர்கள். இசையாஸ், எசேக்கியேல் போன்றோர் மக்கள் தேடிய போலி அமைதித் திவலைகளின் நிலையாமையைச் சுட்டிக்காட்டி, நீதி நெறியில் பாய்ந்து பரவவேண்டி, நிலையான அமைதியை அவர்கள் மத்தியில் இடித்துரைக்கிறார்கள். நிறைவான அமைதி மீட்பரின் வருகையிலேயே உதயமாகும் என நம்பிக்கை ஒளியை ஏற்றிய இறைவாக்கினர் இறை அரசு பற்றிய தப்பறைகளுக்கு ஏற்கனவே சாவுமணி அடித்துவிட்டனர். மெசியாவை அமைதியின் மன்னர் என வருணிக்கும் இசையாஸ் "அவரின் ஆட்சியின் வளர்ச்சிக்கும், அமைதியின் பெருக்கிற்கும் முடிவு என்பதே இராது" என்கிறார். (இசை 9:7)

**கிறிஸ்துவே அமைதி:** அமைதியின் அண்ணல் இயேசுவின் "உலகில் அவர் தயவுபெற்றவர்களுக்கு அமைதி ஆகுக" )லூக். 2:14) என்னும் பிறப்புச் செய்தியும்; "உங்களுக்குச் சமாதானம்" (அரு. 20:19) என்னும் கிறிஸ்துவின் உயிர்ப்புச் செய்தியும் புதிய ஏற்பாட்டின் கருவூலகமாகின்றன. இயேசுக்கிறிஸ்து தரும் அமைதி உலகத்தால் வழங்கமுடியாத அமைதி. "நான் அளிக்கும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம்போல் அன்று." (அரு. 14:27) "உலகில் வேதனையுண்டு. நான் உலகை வென்றுவிட்டேன்". (அரு. 16:33) நற்செய்தியில் அமைதியின் இறைவன் என்று வழங்கப்படுவது (உரோ. 16:20; 1 தெச. 5:23), மீட்பின் இறைவனையே குறிக்கின்றது. இயேசு மீட்பும் விடுதலையும், அமைதியும் வழங்குகின்றார் என்பதற்குப் பதிலாக, வாழ்வும் வழியுமாயுள்ள இயேசுவே சமாதானம் (எபே. 2:14) என்றாலும் ஒரு உண்மையையே குறிக்கின்றது. இயேசுவின் வழியாய் தந்தையாகிய கடவுளுடனும் சமாதானம் கொள்ளும் நாம் அவர் வழியாக அயலவரோடும் ஒன்றுபடுகிறோம். (1 கொரி. 7:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் முரண்பாடுகள்

ஒவ்வொருவரையும் ஒளிர்விக்கும் ஒளியானது உலகிற்கு வந்து கொண்டிருந்தது. ஆனால், உலகமோ அவரை அறிந்து கொள்ளவில்லை. அமைதியின் அண்ணலை இனம்கண்டு கொள்ள அதன் கண்கள் கட்டுண்டு இருந்தன. மக்கள் பார்வை குறுகியதாக இருந்தது. பலர் தாம் கீறிய சுற்றுவட்டத்துள் இறைவனைச் சிறைப்பிடிக்க முயன்றனர். இதனால் இறை அமைதியைச் சுவைக்கத் தவறிவிட்டனர். பின்வரும் ஆறுவகை யான மக்கட் கூட்டம் இதன் பொருளை நன்கு விளக்கும் என எண்ணு கிறேன்.

**பரிசேயர் (Pharisees):** இவர்கள் சட்டத்தைப் பாதுகாத்த மதத்தலைவர்கள். 'தோரா' என்ற சட்ட நூலுக்கு முதலிடம் கொடுத்து, தாம் விரும்பியபடி அதற்கு விளக்கமும் கொடுத்து, பாரம் பரியத்தில் ஊறிய பழமைவாதிகள். உயிரே போனாலும் சட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிக்க அடிபிடிப்பட்டவர்கள். இவர்கள் பிறரி லும் தாம் நீதிமான்கள் (லூக். 18:9), உயர்ந்தவர்கள் என அகங்காரம் கொண்டு மக்கள் புகழுரைக்காக நீதியின் முகமூடியில் வாழ்ந்த கபட மனம் படைத்தவர்கள். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என இயேசு சாடும் இவ்வர்க்கத்தினர் உள்ளத்தில் அமைதி இழந்து, அடுத்த வர் மன்னிப்பில் பெற்ற அமைதிக்கும் தடைக்கற்களாக நின்றனர். இன்றும் ஊர்க் கட்டுப்பாடு, சம்பிரதாயம், கோவில் ஒழுங்கு, இவை தேவையாயினும், யாராயினும் இவற்றைக் கடவுளாக்கி மனித உணர்வுகளையும், மாண்பினையும் மதிக்கத் தவறுமிடத்து, சமாதானத் தைப் பொறுத்தவரையில் இலவுகாத்த கிளிகளாகின்றனர்.

**சட்டவல்லுநர் (Scribes) :** இவர்கள் சட்டங்களைத் திரிபறக்கற்று அவற்றை விளக்குவதில் பாண்டித்தியம் பெற்றவர்கள். சட்டங்களைப்பற்றி வாதாடி, விவாதத்தில் வெற்றிபெறு வதே இவர்கள் இலட்சியம். உண்மையை வெளிக்கொணருவதிலேயோ அவற்றைக் கடைப்பிடிப்பதிலேயோ அக்கறை காட்டாது புத்தியின் சால வித்தைகளில் இன்பம் கண்டவர்கள். இன்றும் தம் சுயநல சதித் திட்டங்களுக்குச் சார்பாக மேடைகளையும், தொடர்புச்சாதனங்களையும் பயன்படுத்தி பேச்சுவார்த்தை, மகாநாடு, கலந்துரையாடல், கருத் தரங்கு என்று மக்களை ஏமாற்றும் 'அரசியல்வாதிகள்' உண்மைக்குக் குழிபறித்து அமைதியைச் சாகடிப்பவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுசேயர் (Sadducees) :** ஊரோடு ஒத்து வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையுடையோர். சமுதாய மேல்மட்டத்தில் இருந்த இவர்கள் பணக்கார வியாபாரிகளாகவும், நிலச்சுவாந்தர்களாகவும், ஆலயத்திருப்பணியாளர்களாகவும் விளங்கினர். இவர்களிடையே செல்வம் புரண்டது. செல்வாக்குத் தவழ்ந்தது. மறுவாழ்வில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் இவர்கள். இவ்வுலக இன்பங்களில் திளைக்க விரும்புவோரும் இவர்களை ஒத்தவர்கள். போலி மதிப்பீடுகளைச் சமுதாயத்தில் விதைத்து சமாதானத்திற்குப் பதில் அநீதிக்கும், சுரண்டல்களுக்கும் தப்பறைகளுக்கும் வித்திடுபவர் இவர் போன்றோரே. விண்ணகத்தை சில மனித கோட்பாடுகளாலும், மனித ஆற்றல்களாலும் படைக்கலாம் என எண்ணும் நாஸ்திகர்களும் இக்குழுவைச் சார்ந்தவராவர்.

**தலைமைக் குருக்கள் (High Priests) :** வழிபாட்டில் அமைதி காண விரும்பிய இக்குழுவினர் சடங்குகள் என்ற வலையில் சிக்குண்டு, வாழ்வுக்கும் வழிபாட்டுக்கும், அன்புக்கும் சட்டத்திற்குமிடையே பிரிக்கும் சுவர் எழுதி இறைவனைத் தொலைத்துவிட்டனர். இறையரசின் மதிப்பீடுகளைக் கைவிட்டுவிட்டு கோவில்கள், யாத்திரைகள், நேர்த்தி, நைவேத்தியம் என்றும், சமயங்களையும் தெய்வங்களையும் மாற்றி மாற்றி வழிபடவும் விரும்புவோர் உள்ளத்தில் அமைதியின்றி அங்கலாய்ப்புக்கொள்கிறார்கள்.

**எஸ்சியர்கள் (Essenes) :** கடுமையான துறவற வாழ்க்கையைப் பின்பற்றுபவர்கள். இவர்களிடம் கூட்டு வாழ்வு, தவ முயற்சிகள் போன்ற நன்மைகள் இருப்பினும், காலப்போக்கில் ஒழுக்க சட்டங்களுக்கும், உடலை வீணே வருத்தும் தவ முயற்சிகளுக்கும் அளவுக்குமீறிய முக்கியத்துவம் கொடுத்து அமைதியின் அண்ணல் கிறிஸ்து வழங்கிய சுதந்திர, மகிழ்ச்சி உணர்வுகளை இவர்கள் அனுபவிக்கத் தவறிவிட்டனர்.

**தீவிரவாதிகள் (Zealots) :** மெசியாவின் வருகையை ஓர் அரசியல் விடுதலை வாழ்வாகக் கருதினர் இக்குழுவினர். யூத இனமே ஆளப்பிறந்த இனம் என்ற இனவெறியில் ஆயுதம் தாங்கிப் போர்புரிந்தனர். யூத இனத்திற்கும் அதன் ஆட்சி உரிமைக்கு அச்சுறுத்தலாய் விளங்குவோரைக் குத்திக்கொல்லவும் தயங்காத வீரர்கள் இவர்கள். வாளை உறையில் போடு என சீமோன் இராயப்பரை அதட்டும் இயேசு, வன்செயல், அமைதியின் பாதைக்கு முட்டுக்கட்டை என்கிறார். பலாத்காரம், ஆயுதம், வன்செயல், அடக்குமுறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பு போன்றவை எவ்வகையிலும் நீடித்த அமைதிக்கு வழிகளாக அமையா என்பது வெள்ளிடைமலே. இனம், மதம், மொழி, சாதி, குலம் என்ற பேத வெறியில் அமைதி குலேகின்றது.

மேற்கூறிய ஆறுவித மக்களும் தம்மகத்தே சில தூய எண்ணக் கருவைக் கொண்டிருந்தாலும், இயேசு போதித்த இறையரசின் மதிப்பீடுகளுக்கு முரணயினர். அதிகாரம், அந்தஸ்து, பணம், வெளிவேடம் போன்ற மதிப்பீடுகளால் இயேசுவின் வழிக்கு முரணன பாதையைக் காட்டினர்.

## இறையரசின் மதிப்பீடு

இயேசுவின் போதனையின் கரு ''காலம் நிறைவேறிற்று, கடவுள் அரசு நெருங்கிவிட்டது. மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்கு 10:15) என்பதேயாகும். அரசு என்ற சொல் 'பசிலேயா' என்ற கிரேக்கச் சொல்லில் பிறக்கிறது. ஒரு குறிப்பட்ட எல்லையையோ இடத்தையோ குறிக்காது ஆளுகையைக் குறிக்கும் அரசாட்சி என்ற பொருளில்தான் புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம். ''கடவுளின் அரசை முதலில் தேடுங்கள். இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்'' (லூக். 19:31) என்று கூறும் இயேசு அமைதிக்காக ஏங்கும் உள்ளங்களின் பதட்ட நிலைக்கும், தவறுன எண்ணங்களுக்கும் புத்தி புகட்டுகிறார். ''கடவுள் அரசு இதோ உங்களிடையேயுள்ளது'' (லூக். 18.21) எனத் தம் போதனையாலும் சாதனையாலும் ஏற்கனவே ஆரம்பித்துவைத்த இறையாட்சியில் எமை அழைக்கின்றார்.

அவர் அழைப்பில் புதைந்திருந்த சவால்கள் பலரை இடறல்பட வைத்தன. சிலருக்குப் புரியாத புதிராயின. வேறு சிலரைத் தவருகப் புரிந்து அவரைக் கொல்லவும், மறுதலிக்கவும், காட்டிக்கொடுக்கவும் தூண்டின.

அதிகாரம் அல்ல பணி வாழ்வு,
அந்தஸ்து அல்ல சகோதரத்துவம்
செல்வம் சேர்ப்பது அல்ல பகிர்ந்து அளித்தல்,
பலாத்காரம் அல்ல அன்பு வழி

என்று அமைதிப் போராட்டத்தில் கொள்கைகள் அமைத்தார் இயேசு. மலேப் பொழிவுதரும் புதையல்தான் இயேசு நிறுவும் இறையரசின் செல்வங்கள். 'முரண்பாடுகள்' உண்மை அமைதியைக் குழிதோண்டிப் புதைத்தாலும் அது என்றும் இறப்பதில்லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பின் நிறைவு

கலங்கியிருந்த தம் சீடர்க்கு உயிர்த்த ஆண்டவராக இயேசு வழங்கிய அன்பின் கொடைதான் சமாதானம். இயேசு தொடக்கி வைத்த இறையரசின் நிறைவுதான் அவர் அளிக்கும் சமாதானம். அதைத் தம் சீடருக்கு அளிக்குமுன் அவர் வழிநடந்த பாதை, அவர் புரிந்த உயிர்ப்பலி அச்சமாதானத்தின் விலையேயாகும். பொதுநலத் தேவைகள் காலப்போக்கில் இடைவிடாது மாறிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அமைதி எக்காலத்திற்கும் பெற்றுக்கொள்ள முடியாது. அது தொடர்ந்து வளர்ச்சியுற வேண்டும் என வர்ணிக்கிறது வத்திக்கான் சங்கம். எனவே, அமைதிக்கு வழி புனித இராயப்பர் உள்ளம் குத்துண்ட இஸ்ராயேல் மக்களிடம் விடுத்த சவாலே இன்றும் தொடர்கிறது— மனந்திரும்புங்கள். அவனியில் அமைதி (Pacem in Terris) என்ற சுற்றுமடலில் 23ஆம் அருளப்பர் கூறுவது போன்று ''அமைதி, உண்மையின் அத்திவாரத்தில் நீதியின் கற்களால் கட்டப்பட்டு, அன்பினால் இணைக்கப்பட்டு, சுதந்திரத்துடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது.'' முழு அமைதியை இறையரசின் முழு நிறைவில்தான் பெற முடியும். எனினும் ஏற்கனவே உதயமான அமைதியின் விடிவெள்ளி இயேசுக்கிறிஸ்துவில் நாம் கொள்ளும் உயிருள்ள விசுவாசத்திலும் அர்ப்பணத்திலும், அவர் வழியாக அயலவரோடு கொள்ளும் சகோதரத்துவத்திலும் ஓரளவு அதை அனுபவிக்கமுடியும். தப்பறையான கொள்கைகளிலிருந்தும், தவறான மதிப்பீடுகளிலிருந்தும் பெறவேண்டிய தொடர்ச்சியான மனமாற்றம் அமைதிக்கான படிக்கட்டுகளாகும். **கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் வழிநடந்து பெருவெள்ளமான 'கிறிஸ்து — அமைதியில்' என் பங்கு சிறுதுளியேயானாலும் நிறைந்த நம்பிக்கையுடனும், தளராத மனத்துடனும் அதை ஏற்று செயல்படுத்துகையில் சமாதானம் ஒரு கனவாகவல்ல, கற்பனையாகவல்ல, கானல்நீராகவல்ல, மாறாக ஒருவற்றாத நீரோடையாகின்றது.**

---

**திடமான உறுதிமொழியுருவில் இறையரசு ஏற்கனவே நிலவினாலும், இன்னும் அது முழுமையாக உருப்பெறவில்லை.**

**J. Moltman**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Biblical notion of the Kingdom of God

Fr. Anton Matthias

In the Old Testament God revealed Himself to the people Israel in a personal Way. He was their King and Redeemer: (Exodus 6:4-7) through the covenant. The people of Israel believed in the power of God and they did not dare to mention His name out of respect.

In the New Testament Jesus preached the Kingdom of God (Mk. 1:15). This Kingdom is to overpower sin, slavery, and satan. The preaching and miracles of Jesus were centred on the Kingdom of God. The values of the gospel reveal nothing but the Kingdom of God. Freedom, Justice, and love are the greatest values which Jesus Christ brought to the world.

*

# Kingdom — Just Economic Order

Fr. M. E. Pius

The early Christian Community felt that the poor, destitute, starving, sick, exploited and oppressed had to be liberated in the new economic order of the Kingdom of God.

Jesus opted for the circumstances of the poor in his birth, life and in the manner of his death. In his inaugural sermon in the Synagogue of Nazareth he releases the manifesto of the Kingdom. The significance of his mission and the intervention of God on behalf of the poor is affirmed beyond buodt and highlighted in the beatitudes as given by St. Luke. Jesus is identified with the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

oppressed and the poor. The magnificat of Mary is the song of the Kingdom. The powerless and the voiceless will be powerful and all will have a voice.

The strongly this-worldly character of the Kingdom should not be blunted. The Kingdom of God is this-worldly and other-worldly, spritual and material, personal and social. Though Jesus preached a religious message, it had material, economic, social and political implications and consequences. His teachings were a threat to the controllers of the then-prevailing order and so he paid a high price for the cause. Those who take the side of Justice should be prepared to be martyrs.

✶

# The Kingdom of God and Culture

**Fr. J. Nicholas**

The breaking-through of the kingdom of God into this world began with the coming of Jesus Christ. Jesus preached the kingdom of God through the cultural symbols that existed during his time. The parables through which he explained the nature of the kingdom were truly the cultural signs of his own people. The kingdom is for all the pepole of this world, irrespective of race, caste and other social discriminations. It has to penetrate into all the cultures in order to gather together everyone under the reign of God. The various cultures which exist and grow in this world are great vehicles to carry the message of the kingdom of God. This kingdom can grow only through the cultures. In the eschatological kingdom all the cultures will be assumed together to give praise to God as one family.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*SUMMARY.*

# Towards A Post-Va . II...

(Continuation)

*THESIS* III: Further plans and orientations of unprecedented nature which originated in Vatican II through the **Pastoral Constitution on Church in the Modern World**, and through **Declarations on the Relationship of the Church to non-Christian religions** and on **Religious Freedom**, all of which demand a bold study of the **presence and work of the Spirit of God, outside the Church, in all the religions and secular realities of life in the World** and even beyond the space-time dimension.

*THESIS* **IV:** The pneumatology demanded by the renewal plans and orienations of Vatican II, cannot be met any more by the traditional pneumatology of mere compartmental dogmatic pronouncements, similar to the earlier 'Christologies from above,' but only **by an all - embracing study of the Spirit as he lives and operates in and outside (space) the Church and before and after (time) the Christ - event.**

*THESIS* V: An urgent pastoral need of the hour is also a **new and bold way of discernment of the Spirit** to help Churches and their leaders to **liberate** them from their old categories and methods of discernment and to **operate new criteria and methods for discernment of the Spirit** so as to **collaborate more effectively** with the Spirit, **wherever, whenever and in whatever He is operative.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Into the Stream of Peace

(Peace and Kingdom)

by Fr. A. Jeeva Paul o. m. i

'Peace' is the deep desire of every human heart. Today more than ever man craves for peace as the threat of war and extinction frightens him. Yet like a mirage it recedes and evades him.

Peace for the Jews meant the well - being of oneself ; but in the Scriptures as unravelled by the prophets it means righteousness.

The long awaited 'Prince of Peace' came to establish it but the various groups — namely the Pharisees and Saducees, Priests and Scribes, Essenes and Zealots who stuck to their own value, systems failed to recognize Him and deviated from the right path. Jesus who ushered the era of the Messianic Kingdom invites all to walk along the path to peace — which is none other than HIMSELF.

Through a continuous struggle for conversion and with a sense of great hope one can enter into the stream of Peace even though its perfection will be realized only at the fulfilment of His Kingdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We need your help!

Theologizing in Tamil — in the context of our people! Don't you think it is a worthwhile venture?

This is what our Quaterly Review " Irai-iyal Kolangal " aims to accomplish. But we need **your** help. Printing costs are high, the number of subscribers is small. We are finding it difficult to confinue the publication.

Will you come to our aid?

Please send your donations to

**Rev. Fr. J. Nicholas**
'Irai-Iyal Kolangal'
St. Francis Xavier's Seminary
Columbuthurai Jaffne
Sri Lanka.

# நன்கொடை வேண்டுகின்றோம்!

அன்பு நெஞ்சங்களே!

விலைவாசி மலைபோல் உயர்ந்துள்ள இக்காலகட்டத்தில், இறையியல் கருத்துக்கள் குவிந்த எமது சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட உங்கள் உதவியை வேண்டிநிற்கின்றோம். எனவே தாராள மனத்துடன் தங்கள் உதவியை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அருட்திரு. யே. நீக்கிலஸ்
'இறையியற் கோலங்கள்'
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித வளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம் 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org